விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 09 செவ்வாய்க்கிழமை (22.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# தேவையற்ற விமர்சனங்களை நவநீதம்பிள்ளை செய்துள்ளார்

## இலங்கை அரசு கண்டனம்

**முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க வின் பதவிவிலகல் மற்றும் மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டமை ஆகிய விடயங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கையில்,

ஐ.நா உயர்ஸ்தானிகர், இலங்கையின் உள்நாட்டு விடயம் தொடர்பில் தேவையில்லாத விமர்சனத்தைச் செய்துள்ளார். அவரது அறிக்கையில் புறவயத்தன்மை காணப்படவில்லை. இது பக்கச்சார்பானது. தவறான விடயங்களைக் கொண்டுள்ளது. பயன்படுத்திய மொழிநடையும் பொருத்தமற்றதாக உள்ளது. எனவே இதை முழுதாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் செனவிரத்ன புள்ளே (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் இருவர் இன்று விடுதலையாவர்!

### துணைவேந்தர் தலைமையிலான குழுவினர் பொறுப்பேற்பர்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கந்தையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் நான்கு பேரில் இருவர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பவானந்தன் மற்றும் விஞ்ஞானபீட மாணவன் சொலமன் ஆகியோரே விடுவிக்கப்படவுள்ளனர்.

இரண்டு மாணவர்கள் இன்று விடுவிப்பதை அடுத்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி, முகாமைத்துவத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் ஆகியோர் வெலிக்கந்தைக்கு சென்றுள்ளனர்.

இரண்டு மாண (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரை பீரிஸ் சந்திப்பார்

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாளை புதன்கிழமை இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ளார்.

இந்திய–இலங்கை கூட்டு ஆணைக்குழு அமர்வுக்காக ஜி.எல்.பீரிஸ் நேற்று இந்தியா சென்றுள்ளார்.

இரண்டு நாட்கள் இந்த அமர்வில் பங்கேற்கும் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் (20ஆம் பக்கம் பார்க்க)

## இரட்டை வேடத்தில் அமெரிக்கா–சந்திம

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அரசியல் குற்றவியல் பிரேரணை தொடர்பில் அமெரிக்கா இரட்டைவேடம் போட்டு செயற்படுவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

காலி–ஹக்மீமன பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நாட்டில் உள்ள அனைவருக்கும் ஒரே சட்டமே. உயர் அதிகாரிக்கு ஒருசட்டம்;விவசாயிகளுக்கு ஒருசட்டம் என்று (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்டன தீர்மான எதிர்மனுக்கள் மொஹான் பீரிஸிடம் சமர்ப்பிப்பு!



பதவி நீக்கப்பட்ட தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான நாடாளுமன்ற கண்டனத் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவற்றை புதிய தலைமை நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தன.

இந்த மனுக்கள் நேற்று நீதிமன்றத்திற்கு வந்தபோது கருத்து முன்வைத்த அரசதரப்பு சட்டத்தரணி ஐந்து நீதியரசர் அடங்கிய குழு முன்னால் மனுக்களை விசாரிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அது தொடர்பான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக மனுக்களை புதிய தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னால் சமர்ப்பிக்குமாறு அரச தரப்பு சட்டத்தரணி கூறினார்.

ஆனால் அந்தக் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்த மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் புதிய தலைமை நீதியரசரின் நியமனம் சட்டத்திற்கு புறம்பாக நடந்துள்ளது என்றும் குறித்த மனுக்களை விசாரிப்பதற்கு அவருக்கு அதிகாரங்கள் இல்லை என்றும் வாதிட்டனர்.

எனினும் அரசதரப்பு சட்டத்தரணியின் கோரிக்கையை பின்னர் ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் மனுக்களை புதிய தலைமை நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானித்தனர்.

இதேவேளை, பதவி நீக்கப்பட ஷிராணி பண்டாரநாயக்க மீதான கண்டனத் தீர்மானத்திற்கு எதிராக (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுர்வேத வைத்தியர் கழுத்து நெரித்துக் கொலை

ஆயுர்வேத வைத்தியர் ஒருவரை மோட்டார் சைக்கிள் கேபிளினால் கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு ஆறரைப் பவுண் தங்க நகையை திருடர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் பொற்பதிகொக்குவில் கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில்துரை சாமி ஜெயரட்ணம் (வயது 66) என்ற ஆயுர்வேத வைத்தியரே கழுத்தை நெரித்து கொடூரமாக (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடித்ததில் சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் பிரதேசத்தில் நிலக்கண்ணி வெடியொன்று வெடித்ததில் இராணுவச் சிப்பாய்யொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வெடிப்புச் சம்பவம் நேற்று மு.ப 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் லலித் தாமர (வயது–27)என்ற இராணுவச் சிப்பாயே படுகாயமடைந்த் நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பேருந்துடன் இராணுவ பஸ் விபத்து

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் பஸ் தனியார் போக்குவரத்து பஸ்ஸுடன் மோதியதால் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று பி.ப. 3.25 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் தனியார் பேருந்தில் பயணித்த குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த குடும்பப் பெண்மணியான செல்வரத்னம் புஸ்பராணி (வயது –38), புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த எஸ். ஜெயகணேஸ் (வயது 37), ஊரெழு வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் தனியார் பேருந்தின் நடத்துநருமான குணரட்ணம் சசிராஜ் (வயது 29) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம்–புன்னாலைக்கட்டுவன் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து புன்னாலைக்கட்டுவன் சந்தியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு இருந்த போது இராணுவத்தினரின் பேருந்து தனியார் பேருந்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் ஆட்சிக்காலம் 2014 வரையே நீடிக்கும்!

### ரணில் ஆருடம்

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் 2014 வரையிலே நீடிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிஸ்கட் பைக்கற் ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் காலவாதியாகும் திகதி காணப்படும். அதேபோன்று இந்த அரசாங்கம் காலாவதியாகும் திகதி அடுத்த ஆண்டாகும்.

அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேடே மரக்கறி மற்றும் உணவுப்பொருட்களுக்கான விலை உயர்விற்கு காரணம். கத்தரிக்காய் ஒரு கிலோ 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப் படுகிறது.

டிசம்பர் ஜனவரி மாதத்தில் நாட்டில் நிலவும் காலநிலையை கருத்திற்கொண்டு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதனை தீர்மானித்திருக்க வேண்டும்.

அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பலை வலுப் பெற்று வருகிறது. நாட்டின் கல்வித்துறை சிரியாவைப் போன்றும், சுகாதாரத் துறை லிபியாவைப் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் நடந்த வர்த்தகக் கண்காட்சிக்கும் யாழ்.வணிகர் கழகத்திற்கும் தொடர்பில்லை

## வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த சர்வதேச வர்த்தகக் கண் காட்சிக்கும் யாழ்.வணிகர் கழகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. கண் காட்சிக்கான அழைப்பிதழ் கூட எமக்கு வழங்கப் படவில்லை. இவ்வாறு யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரன் தெரிவித்தார்.

20.01.2013 அன்று வெளியான வலம்புரியில் 'எங்கள் இளைஞர்களின் வேலைவாய்ப் பிற்கு சர்வதேசவர்த்தகக்கண்காட்சி வித்திடுமா?' என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இதில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை வருடந்தோறும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற் கான ஏற்பாடுகள் தீவிரமாக உள்ளன. இதற்கு யாழ்ப்பாண வணிகர் கழகமும் காத்திரமான ஆதரவை வழங்கி வருகின்றது எனக் குறிப் பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த வர்த்தகக் கண்காட்சிக்கும் வணிகர் கழகத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை- இக்கண்காட்சியாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறுகின்றது.

இதற்கான அழைப்பிதழ் கூட இந்த வருடம் எமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் யாழ்.வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார். (ந-6)

# மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க கல்விச்சமூகம் தலையிட வேண்டும்!

## பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப் படகுகளினால் இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை அரசியல் மயப் படுத்தபடாமல் அதில் கல்விச் சமூகம் தலையிட்டால்தான் தீர்வொன்றினை எட்டமுடியும் என ருகுணு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் தெரிவித்தார்.

கல்வியாளர்கள் இப்பிரச்சினைக்குள் தலையிட்டால்தான் தூர நோக்குடைய இரு பகுதி மீனவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினைப் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக தவித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் வட பகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து, சர்வதேச கருத்துப் பட்டறையொன்றை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமும் ருகுணு பல்கலைக்கழகமும் இணைந்து நேற்றையதினம் யாழ். பல்கலையில் நடத்தியிருந்தன.

கடந்த இரண்டு வருட காலமாக பாக்கு நீரிணையில் நிலவும் கடற்றொழில் பிரச்சினை குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், அபிவிருத்தி கற்கை நிறுவகம், சென்னை மற்றும் அம்ஸ்டெடாம் பல்கலைக்கழகங்கள் ஆகியன இணைந்து நடத்திய ஆய்வின் முடிபுகள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இருநாட்டு மீனவர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக இம்மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

முதலில் இப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வொன்றை ஏற்படுத்தி விட்டு இரு நாட்டு மக்களும், இருநாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

இப்பேச்சுவார்த்தை மூன்று கட்டங்களாக அதாவது குறுகிய கால, இடைக்கால, நீண்டகால பேச்சுவார்த்தைகளாக அமைதல் வேண்டும்.

இவ்மீனவர்களின் பிரச்சினையில் அரசியல் பிரச்சினை தவிர மனிதாபிமான பிரச்சினையாகவும் உருப் பெற்றுள்ளது.

ஆகையினால் இது கட்டாயம் தீர்க்கப் பட வேண்டிய முரண் பாடாகும்.

அதற்கு பல்கலைக்கழகங்கள் பெரிதும் துணை புரி தல் வேண்டும்.

இரு நாடுகளும் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுத்து முரண்பாடுகள் நீக்கப்படு வதற்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

இருபகுதி மீனவர்களுடைய மனநிலையினை புரிந்து கொண்டு கருத்து, நோக்கு விடயங்கள் பகிரப்படல் வேண்டும்.

பல்வேறு சிந்தனைகள், வழிமுறைகள், பணிகள் உள்ளன. அவற்றை சமகாலத்தில் செயற்படுத்த முடியுமா? என நாம் ஆராய வேண்டும் என்றார் அவர்.

மேலும் பல்கலைக்கழகம் ஆரம்பகாலங்களில் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தன. ஆனால் தற்போது அவையே பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-4)

# காயப்பட்டவரையேற்ற கடமையிலில்லை அம்புலன்ஸ்

(முல்லைத்தீவு)

விறகு வெட்டிக் கொண்டிருந்த வேளை தவறுதலாக கோடரி வழுக்கி காலில் விழுந்த தால் பலத்த காயமடைந்த சம்பவம் முல்லைத்தீவு கொக்குளாய் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுமாலை 3:50 மணியளவில் இடம் பெற்ற இவ்விபத்து சம்பவத்தில் கொக்கிளாய் கிழக்கைச்சேர்ந்த சுரேஸ்குமார் (வயது 35) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக கொக்கிளாய் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட இவரை மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டுசெல்வதற்கு இழுபறிநிலை காணப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை வீட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த வேளை தவறுதலாக கோடரி வழுக்கி காலின் மீது தெறித்ததில் காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து உடனடியாக முல்லை கொக்கிளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மேலதிக சிகிச்சைகளை வழங்கமுடியாமையால் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காயமடைந்த நபரை முல்லை மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்காக கொக்கிளாய் வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி அழைக்கப் பட்டுள்ளது. இதன்போதே குறித்த அம்புலன்ஸ் அங்கு கடமையில் இல்லாதமை தெரியவந்துள்ளது.

இதனால் காயப்பட்ட நபரை உடனடியாக முல்லை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமையால் மேலதிக சிகிச்சைக்காக அருகில் உள்ள வேறு வைத்தியசாலைக்கே அனுப்பி வைத்ததாக தெரியவருகிறது. (செ-5,267)


# தவறிவிட்டது

இரத்தினம் ஜெகநாதன் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம், திருநெல்வேலிப்பகுதியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் விலாசத்தில் ஒப் படைக்கவும்.

தொடர்புகளுக்கு:-0213008603


# மரண அறிவித்தல்

## பசுபதி அரசரெட்ணம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி அரசரெட்ணம் கடந்த 19.01.2013 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சொக்கலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் தவமலரின் அன்புக்கணவரும் துஷ்யந்தன் (லண்டன்), Dr.துஷ்யந்தி, துஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநந்தினி, நகுலன் ஆகியோரின் மாமனாரும், சரோஜாதேவி, வசந்தகுமார், யோகதேவி, விமலாதேவி, இந்திராதேவி, ஜெயக்குமார், ரவிந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகம்பிகை, லோகேஸ்வரி, விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன், இரட்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2013) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிருவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிருவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிருவில்
வேலணை

(A-2201)

தகவல்:
குடும்பத்தினர்


மாறாட்டை வாழ்த்துகின்றோம்



திரு. ந.காண்டீபன்

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து இன்று 22.01.2013 முல்லைத்தீவு கல்வி வலயத்தில் தனது கடமைப் பொறுப்புக்களை ஏற்கும் எமதுகல்லூரி ஆசிரியர் திரு.ந.காண்டீபன் அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
கிளி/ முருகானந்தா கல்லூரி,
முரசுமோட்டை.

(A-2200)

# காணி விற்பனைக்கு

1. புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு
2. இலந்தை குளம் வீதியில் அமைந்துள்ள மூன்று பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு
3. நாவலடியில் ஆறு பரப்பு தென்னை மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
0750427521

(1543)

# பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :- ரூ100/- சப்பாத்தி ரூ100/-

தொடர்புகளுக்கு: இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-1660)





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நட்பில் குறையில்லை!

இவ்வுலகில் ஒருவருக்கொருவர் நட்பாக இருப்பது நல்லது தான். அது அவசியம். நல்ல நட்பு சிறந்த விதமாகப் பயன்பட வேண்டுமென்றால் அதற்குப் புத்திசாலித்தனம் மிக மிகத் தேவை.

இந்தக் கருத்து உங்களுக்கு சற்று வித்தியாசமாகத் தென்படலாம். இருந்தாலும் அதிலேயுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை விளக்குவதற்கு கதையொன்று கூறப்படுகிறது. அதைப் பார்ப்போம்.

ஒரு ஊரிலே காய்ந்துபோன இலையும்– மண் கட்டியும் உற்ற சிநேகிதர்களாக இருந்தனர்.

அதாவது இருவரும் பிரண்ட்ஸ். ஒருநாள் இவை இரண்டும் பேசி கொண்டன.

“நாம் இப்படியே இருந்து கொண்டு இருக்கிறோமே... பயணிக்கும் வழியில் புண்ணியம் தேடிக் கொள்ள வேண்டாமா?” என்று இலை கேட்டது.

தேடிக் கொள்ள வேண்டியதுதான். அதற்கு என்ன செய்யலாம்” என்று மண் கட்டி கேட்டது.

மனிதர்கள் புண்ணியம் தேடிக் கொள்வதற்கு காசிக்குப் போகிறார்கள். அதேபோல் நாமும் காசிக்கு யாத்திரையாக புறப்பட வேண்டியதுதான்” என்று இலை கூறியது.

சரியென்று இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அதாவது, போகும் வழியிலே ஏதாவது துன்பம் ஏற்பட்டால்... இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். அதுதான் அந்த முடிவு. இப்படியாக ஒப்பந்தம் செய்து கொண்டு இருவரும் புறப்பட்டார்கள்.

இருவரது பயணத்தின்போது ஒருநாள் கடுமையான காற்று வீச ஆரம்பித்தது. இலைக்குத் துன்பமாகி விட்டது. உடனே ஒப்பந்தத்தின் படி மண்கட்டி அந்த இலையின் மேலே ஏறி அமர்ந்து விட்டது. அதனால் இலையை காற்று அடித்துச் செல்வது காப்பாற்றப்பட்டது.

காற்று ஒரு வழியாக நின்று விட்டது. இவ்வாறு அவர்களது பயணம் தொடர்ந்து கொண்டிருந்த போது, மீண்டும் ஒரு நாள் திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது.

உடனே இலை மண்கட்டியை காப்பாற்ற வேண்டுமல்லவா. இலை, மண்கட்டியின் மேலே ஏறி அமர்ந்து கொண்டது. அதாவது அதை இது மூடிக் கொண்டது.

மழை நீர் மண்கட்டி மீது படவில்லை. அதனாலே அது கரைந்து போகவில்லை.

இதனால் இருவரும் ஒருவரையொருவர் சந்தோசப் பட்டுத்திக் கொண்டார்கள்.

“பார்த்தியா! நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு அன்பாகவும் ஒத்தாசையாகவும் இருக்கிறோம்” என்று பேசிக் கொண்டன.

இன்னும் சிறிது தூரம் சென்ற போது காற்றும் மழையும் ஒன்றாக அடிக்க ஆரம்பித்தது.

காய்ந்த இலை காற்றின் வேகத்திற்கு பறந்து போனது; மண் கட்டி கரைந்து விட்டது.

காற்றிலே அள்ளுண்ட இலை, ஒரு கற் குவியலின் மேலே போய் விழுந்தது.

அக்குவியலில் இருந்த ஒரு சிறிய கருங்கல் துண்டிடம் இந்த இலை தனது சோகக்கதையைச் சொன்னது. மண் கட்டி இவ்வாறு கரைந்து போன கதையையும் சொல்லி வருத்தப்பட்டது.

அப்போது கருங்கல் துண்டு சொன்னது; “உங்கள் நட்பு சரிதான்... அதிலே எதுவிதமான குறையும் கிடையாது. இருந்தாலும் காசிக்குப் போகும் எண்ணம் நிறைவேற வேண்டுமென்றால், முதலில் நீ என்னைப் போலவுள்ள கருங்கல்லைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்று புத்தி உரைத்தது.

இதிலேயிருந்து நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது நாம் எதை கைப்பற்றுகிறோமோ அது உறுதியானதாக இருக்க வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# ஐஸ் தொழிற்சாலை இயங்காமையால் முல்லைத்தீவு மீனவர்கள் கடும் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர் நலன் கருதி அமைக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலை தொடர்ந்து இயக்கம்பெறாமையால் மீனவர்கள் தேவையற்ற அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கள்ளப்பாடு பிரதேசத்தில் இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஐரோப்பிய ஒன்றியம், யூ.என்.டி.பி. ஆகியவற்றின் ஒத்துழைப்பில் 2011 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கடற்கரை ஓரமாக குறித்த ஐஸ்கட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இத் தொழிற்சாலை தொடர்ந்து 3 மாதங்களே இயங்கியது. இதன்போது மீனவர்கள் அதிக பயனை பெற்றுக் கொண்டனர்.

ஆனால் இன்று இவ் ஐஸ் தொழிற்சாலை இயங் காமையினால் இரண்டாயிரம் வரையான மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள தோடு பிடிக்கப்படும் மிகுதி மீன்கள் மீண்டும் கடலில் கொட்டப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சில கடற்றொழிலாளர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து ஐஸ் கட்டிகளை இறக்குமதி செய்வதாகவும் இதற்கு பெருந்தொகை பணம் செலவழிக்கப்படுவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இறுதி யுத்தத்தின் முன் 3 ஐஸ் தொழிற்சாலைகள் இப் பிரதேசத்தில் இயங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் தற்போது இயக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை கூட இன்று இயங்காத நிலையில் பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் மீண்டும் இவ் ஐஸ் கட்டி தொழிற்சாலையை தொழிற்பட வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-5-267).

# 2050 ஆம் ஆண்டில் சனத்தொகையில் அரைவாசி பேருக்கு நீரிழிவு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

2050 ஆம் ஆண்டளவில் நாட்டின் சனத்தொகையில் அரைவாசிப்பேர் நீரிழிவு நோயின் பாதிப்பை எதிர்நோக்கக்கூடிய அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நீரிழிவு அல்லாத தொற்றா நோய்களும் தற்போது நாட்டிற்கு பெரிய சவாலாக அமைந்துள்ளதென அவ் அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தற்போது 10 தொடக்கம் 15 வீதமான பாடசாலை மாணவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தொற்றா நோய்களின் காரணமாக நாள் ஒன்றிற்கு 650 பேர் மரணமடைவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக தொற்றா நோய் தடுப்பு வருடமாக இவ் வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 200 |
| தக்காளி | 90 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 90 | 90 | 120 |
| கரட் | 160 | 100 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 90 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 190 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 180 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 150 |
| பீற்றூட் | 110 | 90 | 160 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 500 | -- |
| போஞ்சி | 150 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 180 | -- |
| கீரை – 1 பிடி | 20-40 | 50 | 30 |
| தேசிக்காய் | 30-50 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 140 | 90 | 130 |
| வெங்காயப்பூ | 150 | 240 | 100 |

# இராசி பலன்

*22.01.2013*
*(தை 09, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*
*ஏகாதசி பின்னிரவு 3.52 மணிவரை*
*ரோகினி முழுவதும்*
*இராகுகாலம் 3.36-5.06 மணிவரை*
*சுபநேரம் 11.06-12.36 மணிவரை*
*ஏகாதசி விரதம்.*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், பணத்தொல்லைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** கண்ணன் வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, பயணங்களால் பலன் கிடைக்கும், யாராவது உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த காரியங்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர் விடும் நாள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், உற்சாகத்துடன் பணி புரிந்து பிறரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள்,போசன சுகமுண்டு.

**கன்னி** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழியில் தனவரவுகள் ஏற்படலாம், அறிஞர்கள் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பயனுண்டு.

**துலாம்** வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், வீட்டை விருத்தி செய்யும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**தனுசு** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு,ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புகளைப் பெருக்கி கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்** உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

வள்ளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரிக்கு எதிராக இராணுவத் தளபதி தாக்கல் செய்த வழக்கு

# சிங்கள மொழியில் தாக்கல் செய்தமை அரசியல் அமைப்புக்கு முரணானது

## சிரேஷ்ட சட்டத்தரணி இ.த.விக்னராஜா வாதம்



இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவினால் வலம்புரிக்கு எதிராக 10 கோடி ரூபாய் மானநஷ்டம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சிங்கள மொழியில் தாக்கல் செய்திருப்பது அரசியல் அமைப்புக்கு முரணானது. எனவே இராணுவத் தளபதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை முதன்நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என வலம்புரியின் சார்பில் மன்றில் ஆஜரான ஓய்வுபெற்ற நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான இ.த.விக்னராஜா நீதிமன்றைக் கேட்டுக் கொண்டார்.

11.07.2012ஆம் திகதி வெளியான வலம்புரியின் முன்பக்கத்தில் **அதிகாரமில்லாத பதவி; இராணுவத் தளபதி விசனம்** என பிரசுரமாகியிருந்த செய்தி தொடர்பில்,

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய வலம்புரியின் நிர்வாக இயக்குநர் மற்றும் பிரதம ஆசிரியருக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

10 கோடி ரூபாய் மானநஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மன்றில் எடுக்கப்பட்டது.

யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியும், யாழ். மாவட்ட நீதிமன்றின் பதில் நீதிபதியுமான பெ.சிவகுமார் முன்னிலையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வலம்புரியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி இ.த.விக்னராஜா மன்றில் தெரிவிக்கையில், குறித்த வழக்கு 23.11.2012 அன்று தமிழ் மொழி பெயர்ப்புடன், சிங்கள மொழியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது அரசியல் அமைப்புக்கு முரணானது எனக் கூறியதுடன் தனது கருத்தை பின்வருமாறு முன்வைத்தார்.

அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் 24 ஆம் உறுப்புரையின் தேவைப்பாட்டை வழக்காளியின் பிராது, அழைப்புக் கட்டளை பூர்த்தி செய்ய தவறியமையால் வழக்காளியின் பிராதானது முதனிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் முறையே 22 ஆம், 24ஆம் உறுப்புரைகள் 16ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் நீதி நிர்வாக நடவடிக்கைகள் தமிழில் கையாளப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ள வட மாகாணத்தில் அமைந்துள்ள இக் கௌரவ நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் பிராது தமிழ்மொழியில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்பதில் இரு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது.

குறித்த உறுப்புரை 24(1) மற்றும் 24(4) இன் பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நீதி அமைச்சரால் அறிவுறுத்தப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் முறையே, ஆங்கில மொழியிலும் ஆவணங்களைப் பேணவும் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தவும் முடியும் என்பதுடன் ஆங்கில மொழியையும் உபயோகப்படுத்தலாம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் 16 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட உறுப்புரை 25ஏயின் பிரகாரம், ஏதாவது ஒரு சட்டத்திற்கும் இந்த அத்தியாயத்துக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டால் அரசியலமைப்பின் இந்த அத்தியாயமே மேலோங்கும் என தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளதை கௌரவ நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது.

ஆகவே, நீதிநிர்வாக நடவடிக்கை முறைகள் அரசியலமைப்பின் பிரகாரம், வட மாகாணத்தில் அமைந்துள்ள இக்கௌரவ நீதிமன்றில் வழக்காளி முறையே 22ஆம் 24ஆம் உறுப்புரைகள் 16 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து தமிழ் மொழியில் பிராது, அழைப்புக்கட்டளை ஆகியவற்றைத் தாக்கல் செய்யவில்லையென்பதை கௌரவ நீதிமன்றம் கவனத்திற் கொண்டு முதனிலை அரசியலமைப்பு சட்ட ஆட்சேபனையின் பிரகாரம் வழக்காளியின் பிராதை தள்ளுபடி செய்து கட்டளையிடுமாறு இவ் எதிராளிகள் மன்றைப் பிரார்த்திக்கின்றார்கள்.

கௌரவ நீதிபதி அவர்களே!

அரசியலமைப்பின் அத்தியாயம் 4இன் 24ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய வட மாகாணத்தில் அமைந்துள்ள இந்த நீதிமன்றத்தில் தமிழ்மொழியில் பிராது, அழைப்புக் கட்டளை என்பவற்றை தயாரித்து சமர்ப்பிக்காமை பாரிய சட்டத் தவறு என்பதை வெளிப்படுத்தி முதல்நிலையிலேயே வழக்காளியின் பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோருகிறார்கள்.

இலங்கை–இந்திய உடன்படிக்கையின் பயனாக அதிகாரப்பகிர்வு மூலம் இன முரண்பாடுகளை இல்லாமல் செய்யவெனக் கூறி இலங்கை அரசியலமைப்புக்கு அவசர அவசரமாக, ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் 18ஆம் உறுப்புரையில் **தமிழும் அரச கரும மொழி ஒன்றாதல் வேண்டும்** என திருத் தப்பட்டதேயன்றி தமிழ்மொழி அமுலாக்கம் சம்பந்தமாக விரிவான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என 18 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியில் விளம்பப்பட்டது.

ஆயினும், ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டு மார்கழி மாதம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட **'சட்டம் அல்ல'** அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தம் முழுமையாக் தமிழ்மொழியை அமுலாக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்தது. குறித்த பதினாறாவது திருத்தத்தை முழுமையாக சேர்த்து ஆராயும்பொழுது சட்டவாக்கத்துறையின் நோக்கம் தெளிவாகப் புலனாகும்.

ஏனெனில், அரசியலமைப்பின் 22ஆம் 23ஆம் உறுப்புரைகளை மாற்றீடு செய்து முறையே நிர்வாக மொழியாக தமிழ் மொழி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டதுடன், சட்டவாக்க மொழியாக சிங்களமும் தமிழும் இருக்க வேண்டுமென தெளிவாக குறிப்பிடப்பட்டதுடன் 24ஆம் உறுப்புரையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்திருக்கும் நீதிமன்றங்களின் மொழியாக தமிழ்மொழி பயன்படுத்தல் வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டது.

மேலும், XAVIER CROSS Vs M.SIVALINGAM CALA 435/2003 (சேவியர் குரூஸ் எதிர் எம்.சிவலிங்கம் கலா 435/2003) என்ற வழக்கில், மேன்முறையீட்டு நீதிமன் றம் 04.04.2008இல் வழங்கிய தீர்ப்பில், வட மாகாணத்திலுள்ள நீதிமன்றங்களின் மொழி தமிழ் என்றும் நீதிமன்ற ஆவணங்களும் தமிழில் இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் 24 ஆம் உறுப்புரையின் தேவைப்பாட்டை வழக்காளியின் பிராது, அழைப்புக் கட்டளை என்பன பூர்த்தி செய்யத் தவறியமையால் வழக்காளியின் பிராது முதனிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

ஆகவே, எதிராளிகள் கனம் நீதிபதி அவர்களை மேலே விபரமாகவும் நுணுக்கமாகத் தீர்க்கப்பட்ட வழக்குகளை மேற்கோள்காட்டி அணைத்துள்ளதையும் பரிசீலனை செய்து முதனிலை சட்ட ஆட்சேபனையை அங்கீகரித்து, எதிராளிகள் சார்பில்,

முதனிலை சட்ட ஆட்சேபனையின் பிரகாரம் வழக்காளியின் பிராதை தள்ளுபடி செய்யுமாறு கௌரவநீதிபதி அவர்களிடம் பணிவாக கோரப்படுகின்றது இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி இதவிக்னராஜா தனது வாதத்தை முன்வைத்தார். (ந)

## வட்டு. வடக்கு கிராமம் அபி. திட்டத்திற்கு தெரிவு

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மற்றுமொரு கிராமமான வட்டு. வடக்கு கிராமம் மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 77 பேருக்கு நேற்று இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையினால் சுமார் 4.23 மில்லியன் ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகளில் 282 பேருக்கு சுமார் 24.61 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

நேற்று இடம் பெற்ற நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். இந்தியன் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சந்திரசேகர், இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், செயலர் சோதிநாதன், திட்ட உதவி இயக்குனர் சிவகுமார், வட்டு.வடக்குக் கிராம சங்கானை பிரதேச சேவகர் திலகவதி, வட்டு.மேற்குக் கிராம சேவகர் கணேசலிங்கம் மற்றும் வங்கி வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வட்டு. வடக்கு கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் வட்டு. மேற்குக் கிராமம் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கிராமத்தை அனைத்து வகையில் 2 ஆண்டுகளில் முன்னேற்றி மாதிரிக் கிராமமாக உருவாக்கிட சுமார் 426 பயனாளிகளுக்கு வாழ்வாதார கடன்களை சுமார் 41 மில்லியன் ரூபாய் வழங்கிட திட்டமிடப்பட்டு இதுவரை 142 பயனாளிகளுக்கு சுமார் 10.45 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

இதில் விவசாயம், கால்நடை, சிறுதொழில், வியாபாரம், கல்வி மற்றும் கடல்தொழில்களுக்கான வாழ்வாதார கடன்கள் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4-6)

## பண்ணிசை மற்றும் திருக்குறள் மனனப்போட்டி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யால் ஆண்டுதோறும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்டுவரும் புண்ணி நாச்சியம்மையார் தினம் சார்பான பண்ணிசைப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி ஆகியன எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. கீழ்ப்பிரிவில் தரம் 3, 4, 5 மாணவர்களும் மத்திய பிரிவில் தரம் 6, 7,8 மாணவர்களும் மேற்பிரிவில் தரம் 9, 10, 11 மாண வர்களும் பங்கு கொள்ள முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவ, மாணவியர் தங்கள் பாடசாலை அதிபரூடாக மேலதிக விபரங்களை 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கும் சைவபரிபாலன சபையுடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ போட்டி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி சபை செயலாளர் தி.மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். (செ-9)

## யாழ்.ரெலிகொம் அலுவலகத்தில் அதிகாலை வேளை கொள்ளை

### வடங்கள் களவு போயின

(தெல்லிப்பளை)

யாழ்பாணம் பண்ணையடியில் அமைந்துள்ள சிறிலங்கா ரெலிகொம் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் நேற்று அதிகாலை வேளையில் கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவத்தில் 15 தொடக்கம் 20 இலட்சம் பெறுமதியான தொலைத்தொடர்பு இணைப்பு வடங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருதாவது,

நேற்று அதிகாலை குறித்த பகுதியில் வாகனச்சத்தம் கேட்டுள்ளது. அதிகாலை வேளையாகையால் குடிநீர் கொள்கலவாகனமாக இருக்கலாம் என எண்ணி அங்கிருந்த ஊழியர்கள் குறித்த பகுதிக்குச் செல்லவில்லை. எனினும வாகனம் ஒன்றின் மூலம் தொலைபேசி இணைப்பு வடங்கள் ஏற்றப்படுவதை கண்ட சில அயலவர்கள் கூச்சலிட்டதைத் தொடர்ந்து குறித்த கொள்ளையர்கள் மிகுதி வடங்களை அங்கேயே கைவிட்டு ஒரு தொகை வடங்களுடன் வாகனத்தல் ஏறித் தப்பித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண பொலிஸார் அதிகாலை கடமையில் இருந்த 4 ஊழியர்களை மேலதிக விசாரணைகளுக்காக அழைத்துச் சென்றுள்ளனர். (செ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்த்தேக்கங்கள் இரண்டு பாதுகாப்பு வலயமாகின

(கொழும்பு)


மவுஸ்ஸாகல, காசல்ரீ நீர்த்தேக்கங்கள், கடும் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம் ஆரம்பித்துள்ளதால் இங்கு யாத்திரை செய்யும் அடியார்களின் பாதுகாப்பு நிமிர்த்தமாக இந்த நீர்த்தேக்கங்கள் கடும் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இக் கடும் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கு அனுமதியின்றி உட்புகுதல் கட்டாயமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கங்களில் குளிப்பது பெரும் ஆபத்துக்குரியதாகையால் இந்த நீர்த்தேக்கங்களில் குளிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

யாத்திரிகர்கள் குளிக்க வேண்டியதனால் அதற்கு ஏற்ற இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் தேவையான வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன்படி அந்த ஸ்தானங்கள் யாத்திரிகர்கள் உபயோகிக்கலாம் எனவும் நுவரெலிய பிரிவு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நெவின்பத்மதேவ சகல யாத்திரிகர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

நன்றி:-தினமலர்




## வடபகுதி கடற்றொழிலாளர்கள்

# எதிர்நோக்கும் சவால்கள் குறித்து யாழ்.பல்கலையில் கருத்துப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

பாக்கு நீரிணையில் இந்திய இழுவைப் படகு (ரோலர்)களால் வடபகுதி கடற்றொழிலாளர் சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பல்கலைக்கழகங்களின் ஆர்வம் எனும் தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் கருத்துப்பட்டறை ஒன்று நடைபெற்றது.

நீண்டகாலமாக தவித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து, சர்வதேச கருத்துப்பட்டறையொன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் றுகுணு பல் கலைக்கழகமும் இணைந்து நடத்தியுள்ளன.

கடந்த இரண்டு வருடகாலமாக பாக்கு நீரிணையில் நிலவும் கடற்றொழில் பிரச்சினை குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், அபிவிருத்தி கற்கை நிறுவகம் சென்னை மற்றும் அம்ஸ்டெடாம் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய ஆய்வின் முடிவுகள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இவ்வாறானதோர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் பயிற்சிப் பட்டறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், றுகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர். இதில் நிர்வாகிகள், கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், கடற்றொழில் சமூகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

இலங்கையின் வடபகுதி கடற்றொழில் சமூகங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை ஆராய்வதே இக்கருத்துப் பட்டறையின் முக்கிய அம்சமாக அமைந்தது. யுத்த காலத்தில் கடலுக்குச் செல்ல முடியாதிருந்த இக்கடற்றொழிலாளர் தற்போதும் இந்திய ரோலர்களின் தாக்கங்களால் தொழிலை மேற்கொள்ள முடியாது இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீன்பிடி வலைகள் சேதமாக்கப்படுவதனால் ஏற்படும் பாரிய நிதி இழப்புகள், இழுவைப்படகுகளின்(ரோலர்களின்) பிரசன்னத்தில் கடலுக்கு செல்ல முடியாமை, அத்துடன் கடல் சூழலியல் வளங்கள் கடுமையாக அழிவடைவது போன்ற விடயங்கள் இக்கருத்துப் பட்டறையில் கலந்துரையாடப்பட்டன.

யுத்தம் முடிவடைந்த காலத்திலிருந்து இந்திய இழுவைப்படகுகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் வட இலங்கை கடற்றொழிலாளர்கள் தமது நிலைதொடர்பில் பல்கலைக்கழகங்கள் இணைந்து மேற்கொள்ளும் இந்நடவடிக்கையினை பாராட்டினர்.

பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளைக் கண்டறிவதற்கு பல் ஒழுக்க ஆய்வு, பலமட்ட கருத்துப் பகிர்வுகள் என்பன அவசியம் என்பதை இக் கருத்துப்பட்டறை கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்த நடவடிக்கையானது இலங்கை-இந்திய அரசாங்கங்கள், கல்வியியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சகல வகையிலும் இவ் விடயத்தில் தொடர்புள்ள செயற்பாட்டாளர்களை அவசரமாக நடவடிக்கை எடுக்க கோருகின்றது. (அ-4)

## மாத்தளை வைத்தியசாலையில் 79 மனித தலைகள் மீட்பு

மாத்தளை பொது வைத்தியசாலை வளாகத்தில் இதுவரை 79 மனித தலைகளும் 78 மனித உடற்பாகங்களும் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. மேற்படி பொது வைத்தியசாலை வளாகத்தில் புதிய கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக மண்ணை அகழும் வேளையில் மனித உடற் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இங்கு எடுக்கப்பட்ட தலை மற்றும் உடற்பாக எச்சங்களை மூன்று சட்ட வைத்திய அதிகாரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இந்த எச்சங்கள் காலநிர்ணய பரிசோதனைக்குஉட்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை இந்த எலும்புக் கூட்டு எச்சங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் இவை மிக அண்மைக்காலத்தில் புதைக்கப்பட்டுள்ளன என உறுதியாக கூறப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையை சிதைப்பதே அமெரிக்காவின் திட்டம்

## தே.சு. முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்கர்களுக்கு இலங்கைவரத் தடையில்லை. ஆனால், உள்நாட்டு விடயங்களில் தலையிட்டு நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடாது. மீறிச் செயற்பட முற்பட்டால் சீனாவுடன் இணைந்து பதிலடி கொடுப்போம் என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

புலிகளின் இலக்குகளை இலங்கையில் நிறைவேற்ற அமெரிக்கா கடுமையாக சூழ்ச்சிகளை செய்து வருகின்றது. தொடர்ந்தும் அவ்வாறானதொரு சூழலை இலங்கையில் உருவாக்க இந்நாட்டு மக்கள் இடமளிக்கமாட்டார்கள்என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான பியசிறி விஜேநாயக்க கூறுகையில்,

இலங்கையைச் சிதைப்பதே அமெரிக்காவின் திட்டம். இதற்கு இடமளிக்கப் போவதில்லை. கடந்த பலவருட காலமாக விடுதலைப்புலிகளின் வலையமைப்புடன் இணைந்து இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளையே அமெரிக்கா தொடர்ந்தும் முன்னெடுத்தது. குறிப்பாக ஐ.நாவிலும் இலங்கையைத் த்லைகுனிய வைக்கவே அமெரிக்கா செயற்பட்டது.

இனிமேலும் இலங்கையை அடிமைப்படுத்தவோ நெருக்கடிகளைக் கொடுக்க முற்பட்டாலோ கடும் நடவடிக்கைகளையே முன்னெடுப்போம். சீனாவுடன் இலங்கைக்கு நல்ல நட்புறவு உள்ளது.

எனவே அமெரிக்காவின் சவால்களை சீனாவுடன் இணைந்து இலங்கை முறியடிக்கும். அடுத்த வாரத்தில் இலங்கை வரவுள்ள மூன்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர்களும் உள்நாட்டு விடயங்களில் தலையிடக் கூடாது. மீறிச் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 6'7"<br>கி.பா: 22, 4இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc.in IT, HND (Bank Officer)<br>தொ.இ: B -1020 | பிறப்பு: 1966 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 21.5, சூரி, செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: A/L (சித்த ஆயுர்வேத வைத்தியம்)<br>தொ.இ: G -1077 |
| பிறப்பு: 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'6"<br>கி.பா:36<br>தகைமை/தொழில்: MBBS Doctor. (சத்திர சிகிச்சை நிபுணர்)<br>தொ.இ: B -1021 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62, 7இல் செவ்<br>தகைமை/ தொழில்: பட்டதாரி ஆசிரியை)<br>தொ.இ: G-1079 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை.<br>உயரம்: 5'9"<br>கி.பா: 21 , 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc Physical Science (Development Officer)<br>தொ.இ: B -1023 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:சுவாதி 4<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்: MBBS (மருத்துவபீடம் இறுதியாண்டு)<br>தொ.இ: G -1081 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'8"<br>கி.பா: 20.75, 7 இல் செவ்<br>தகைமை/தொழில்:முகாமைத்துவ நிர்வாகம் MBA (தனியார் நிரந்தரம்)<br>தொ.இ: B -1024 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 29.5, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L (3ஆம் வருட கலைப்பிரிவு மாணவி)<br>தொ.இ: G -1084 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நகர சபையில் நேற்றையதினம் அமளி;

## சில உறுப்பினர்கள் வெளிநடப்பு

மன்னார் நகர சபை செயலாளரின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை என தெரிவித்து நகரசபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பு செய்துள்ளனர்.

மன்னார் நகரசபையின் 2013 ஆம் ஆண்டிற்கான முதலாவது கூட்டம் நேற்றைய தினம் நகரசபை தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நகரசபையின் செயலாளரின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை என தெரிவித்து நகரசபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பு செய்தனர்.

சபையில் எடுக்கப்படுகின்ற எந்த தீர்மானங்களுக்கும் நகரசபை செயலாளர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் தினச்சந்தை வியாபாரிகளை வெளியேற்றி வாராந்த சந்தையாக மாற்றுதல் உட்பட பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த சபையின் செயலாளர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் அமைச்சருக்கு அடிபணிந்து செயலாளர் செயற்படுவதாகவும் நகரசபைக்கு நீதியுடன் சேவை செய்வதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்த நகரசபை உறுப்பினருக்கும் அரச தரப்பு உறுப்பினர் நிலாமுதீன் நகுசீனிற்கும் இடையில் நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நகரசபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் மெரினஸ் பெரேரா பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அனைத்து செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பே சபைக்கு வருவதாக கூறி சபையில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் தரப்பு உறுப்பினர்களான பலர் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதனால் சபைக்கூட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது.

இது தொடர்பாக நகர சபையின் செயலாளர் எல்.ஜே.குரூஸ் கருத்து தெரிவிக்கையில்,

நான் அமைச்சருக்கு சார்பாக செயற்படுவதாக சபை உறுப்பினர்கள் என் மீது வீண் பழி சுமத்துகின்றனர். அவ்வாறு நான் ஒருபோதும் செயற்பட்டதில்லை. நான் உள்ளூராட்சி சட்ட விதிகளுக்கு அமைவாகவே செயற்படுகின்றேன். நீண்ட காலமாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காத அரச தரப்பு உறுப்பினர் என்.நகுசீன் இன்று கூட்டத்திற்கு வந்தமையினாலேயே இவர்கள் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நான் ஒருபோதும் விரோதமான முறையில் செயற்பட்டதில்லை என்றார். (அ-2)

# மஹாகும்பாபிஷேகம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (கூடவத்தறை) இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட மகாயாக மஹாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7.40 மணி தொடக்கம் 8.35 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

வல்வெட்டி வேவில் கலட்டி ஸ்ரீசித்தி விநாயக பூலட்சுமி, மகாலட்சுமி சமேத நாராயண அஷ்டபந்தன பஞ்ச (5) குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.42 மணி தொடக்கம் முற்பகல் 9.54 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# மிதிவண்டியில் பயணிப்போருக்கும் புதிய சட்டம் நடைமுறைக்கு வருகிறது

இரவுவேளைகளில் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்களை கடுமையாக்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இரவு வேளைகளில் துவிச்சக்கரவண்டிகளில் பயணிக்கும் போது பின்னால் பொருத்தப்படும் சிவப்பு நிற ஒளி தெறிப்பாக்கி தொடர்பில் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி 1987.12.29 ஆம் திகதி வெளியாகி அரச வர்த்தமானியின் பிரகாரமும் 1951 ஆம் ஆண்டு 37 ஆவது மோட்டார் வாகன சட்ட த்தின் 37 மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் இது தொடர்பிலான நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எது எவ்வாறாயினும் தற்போது இரவு வேளைகளில் இடம்பெறும் விபத்துக்களில் பெரும்பாலானவை துவிச்சக்கரவண்டிகள் தொடர்பானவை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு காரணம் இரவுவேளைகளில் சரியான பாதுகாப்பு முறைகளுடன் துவிச்சக்கரவண்டிகளை செலுத்தாமையே என பொலிஸார் கூறியுள்ளனர்.

இதன்படி துவிச்சக்கர வண்டிகளின் பின்னால் சிவப்பு நிற ஒளி தெறிப்பாக்கி பொருத்தப்பட்டிருப்பது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறில்லாமல் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வோர் மீது எதிர்வரும் காலங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)

# ஈரானியக் கப்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

இலங்கை நீதிமன்றத்தின் கட்டளையை மீறி தப்பிச் சென்ற ஈரானியக் கப்பலுக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை கடற்படையினரிடமும் வெளிவிவகார அமைச்சிடமும் கூறியுள்ளதாக மேச்சன்ற் சிப்பிங் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாம் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி இலங்கையில் கடல் எல்லைக்குள் ஈரானியக் கப்பலான ஏ.வி.அமினாவை நீதிமன்றக் கட்டளை பெற்று தடுத்து வைத்தோம். அக்கப்பல் முன்னர் ஒரு தடவையும் தப்பிச் செல்ல முயன்றுள்ளதென பணிப்பாளர் நாயகம் செனவிரத்ன கூறியுள்ளார்.

பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாததால் ஜேர்மனி நாட்டு டி.வி.பீ. வங்கி இக்கப்பலுக்கு எதிராக ஒரு நீதிமன்றக் கட்டளையைப் பெற்றதைத் தொடர்ந்தே இக்கப்பல் தடுத்துவைக்கப்பட்டது. இக்கப்பல் எவ்வாறு தப்பிச் சென்றதென்பதை மேச்சன்ற் சிப்பிங் கம்பனிப் பணிப்பாளர்களோ அல்லது கடற்படையினரோ விளக்கமுடியாதுள்ளனர். (அ-2)

# இலங்கையில் கண்டெடுக்கப்பட்டது எரிகல்; வேற்றுக்கிரக தடயம்

உலகில் முதற்தடவையாக வேற்றுக்கிரக உயிர்கள் பற்றிய உறுதியான தடயம் ஒன்றை விஞ்ஞானிகள் இலங்கையில் இருந்து கண்டுபிடித்துள்ளார்கள்.

அரலகன்வில பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட எரிகல் துண்டுகளில் இருந்து விசேட அல்கா வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பிரித்தானிய-இலங்கை ஒன்றிணைந்த ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது.

பக்கிங்காம் பல்கலைக்கழகத்தின் வானசாஸ்திரவியல் பேராசிரியர் சந்திரா விக்ரமசிங்க உள்ளிட்ட குழுவினர் இதனை கண்டுபிடித்திருக்கின்றனர்.

பிரபல ரஷ்யா ருடே இணையத்தளத்தில் பிரசுரமாகியுள்ள கட்டுரை ஒன்றில் இது தொடர்பான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வேற்றுக்கிரக உயிரின் இருப்பு தொடர்பான கோட்பாட்டை உறுதி செய்வதற்குரிய தடயம் இலங்கையில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜேர்னல் ஒவ் கொஸ்மொலொஜி என்ற சஞ்சிகை ஆராய்ச்சியாளர்களை மேற்கோள்காட்டி தெரிவித்திருக்கின்றது.

நாம் வாழும் பிரபஞ்சத்தில் உயிர்கள் உருவாவதற்கு வேற்றுக்கிரக மற்றும் எரிகல் தொகுதிகளே அடிப்படையாக அமைந்துள்ளன என்று அந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கமைய பிரபஞ்சத்தில் ஏனைய கிரகங்களில் உள்ள உயிர் பூமிக்கு வந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# 1200 புலிகள் இன்னும் மறைந்து வாழ்கின்றனர்

## பாதுகாப்பு தரப்பு தெரிவிப்பு

இலங்கை பாதுகாப்பு படையினரிடம் சரணடையாத மற்றும் கைதுசெய்யப்படாத நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இன்னும் ஆயிரத்து 200 பேர் மறைந்து வாழ்கின்றனர் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

புலிச் சந்தேக நபர்கள் 400 பேர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் இருப்பதாகவும் ஏனையோர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு பாதுகாப்பு பிரிவினரால் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளதாக பிபிசியின் சிங்கள சேவையான சந்தேஷிய தெரிவித்துள்ளது.

மறைந்திருக்கின்ற அல்லது கைது செய்யப்படாமல் இருக்கின்ற புலிச் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் எடுப்பது தொடர்பிலும் குறித்த அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-2)





கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்பிற்குட்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நிவாரணப் பொருட்களை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்தியா அதிக நிதியை வழங்குகிறது

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**போருக்குப் பிந்திய காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கம் பாரியளவு நிதியினை செலவு செய்துள்ளதோடு ஒத்துழைப்பும் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.**

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாதிரிக் கிராமத்திட்ட ஆரம்ப விழா நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள இந்தியன் வங்கியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வது தற்போது மிகப் பெரிய சவாலாக உள்ளது.

அவ்வாறு சவாலாக உள்ள கைத்தொழிற்றுறையை விருத்தி செய்யும் நோக்குடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை போன்ற தொழிற்சாலைகளை மீள இயங்க வைக்க அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்றது. அதற்கு இந்திய அரசாங்கம் பாரியளவில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையும் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

இதேபோன்று வடக்கு மாகாணத்தில் போருக்கு பின்பு பல அபிவிருத்திப் பணிகளை, இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 8 ஆயிரத்து 700 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இதனைவிட புகையிரதப் பாதை அமைக்கும் பணியினையும் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்கும் பணிகளிலும் இந்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு நிறைவாகவுள்ளது.

இதற்கென இந்தியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அசோக். கே காந்தா மற்றும் யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் உள்ளிட்டோருக்கு எமது மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வட்டு. வடக்கு கிராமம் மாதிரி கிராம அபிவிருத்திக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனூடாக அந்தக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுககு கடனுதவி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கடந்த வருடம் வட்டு. மேற்கு கிராமம் இத்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் ஊடாக அப்பகுதி கிராம மக்கள் பெரிதும் நன்மையடைந்ததோடு பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்தும் வகையில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே கடனைப் பெற்றுக் கொள்வதோடு நின்று விடாமல் அந்தக் கடனை எந்த நோக்கத்திற்காக பெற்றுக் கொள்கின்றீர்களோ அதனை நிறைவேற்ற அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும். இத்திட்டத்தையும் வெற்றியளிக்க செய்ய வேண்டும்.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் எந்தவொரு குடும்பமும் இருக்கக்கூடாது என்று ஜனாதிபதியால் மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவருக்கும் தனிநபர் வருமானத்தை அதிகரித்து பிரதேச அபிவிருத்திக்கு உதவ வேண்டும். இது பிரதேச அபிவிருத்திக்கு நாட்டின் அபிவிருத்திக்கு உதவும்.

நிரந்தர சமாதானமும் நிரந்தரமான அபிவிருத்தியும் ஏற்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், இந்தியன் வங்கியின் யாழ்.கிளையின் முகாமையாளர் எஸ். சந்திரசேகரர், உதவி முகாமையாளர் ஜெ.கிருபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

## இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைதானார்

(யாழ்ப்பாணம்)


வவுனியா சிப்பிக்குளம் பகுதியில் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி குறித்த நபரை கைது செய்து அவரிடமிருந்த இடியன் துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டு விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டதோடு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9-6)

## கால்கோள் விழா

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் புனித லூக்காஸ் முன்பள்ளியின் கால்கோள் விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு முன்பள்ளியில் முதல்வர் திருமதி எஸ்.றீற்றா தலைமையில் நடைபெறவுள் ளது. இதன்போது சிறார்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படவுள்ளனர். (அ-5-264)



கொழும்பு ஜோன் டீ சில்வா நினைவு மண்டபத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற கலாபூஷணம் அரச விருது வழங்கும் நிகழ்வில் குருநகர் அன்ரனி யேசுராசா (தம்பித்துரை- யேசு) விருதைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# நெல் கொள்வனவின்போது நிர்ணய விலை வேண்டும்

## கிளி. விவசாயிகள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

இவ்வாண்டிற்கான காலபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் நெல் கொள்வனவு நடைமுறையில் கிளிநொச்சி விவசாயிகள் சிலர் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தரகர்கள் மூலம் கொள்வனவு செய்வதால் மாறுபட்ட விலைகளிலும் மிகக் குறைந்த விலையிலும் நெல்லை வழங்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட இறுதியில் காணப்பட்ட சீரற்ற காலநிலையாலும் நெற்பீடை நோய்த்தாக்கங்களினாலும் பாதிப்படைந்து விளைச்சல் குறைவடைந்துள்ள நிலையில் மேற்படியான கொள்வனவினால் விவசாயிகள் மேலும் பாதிப்படைய வேண்டியுள்ளது.

எனவே, உரிய திணைக்களங்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து திணைக்களங்களினூடாக நிர்ணய விலையில் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரியுள்ளனர். (அ-5-264)

# நவநீதம்பிள்ளையை அனுமதிக்க வேண்டாம்!


## சிங்கள கட்சிகள் போர்க்கொடி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரான நவநீதம்பிள்ளையை இலங்கை வருவதற்கு அனுமதிக்கக் கூடாது என இலங்கையின் அரச தலைமையிடம் பல்வேறு தரப்புக்கள் வலியுறுத்தியுள்ளதாக சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவற்றுடனும் புலிகள் சார்புபுலம் பெயர் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் நவநீதம்பிள்ளையை இலங்கைக்குள் அனுமதிப்பது ஆபத்தான விடயம் என குறித்த தரப்புகள் வலியுறுத்தியுள்ளதாகவும் அந்த இணையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைப் பேரவை அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் இலங்கை வரவுள்ளமையானது இலங்கை அரசுக்குப் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் எனவும் அரச தலைமையிடம் இந்தத் தரப்புக்கள் சுட்டிக்காட்டியுள் ளன என்றும் இணையம் தெரிவித்துள்ளது. (அ-2)



கலாசார அலுவல்கள் வழிகாட்டலில் ஜோதிட விஞ்ஞானம் அரச விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாசார மற்றும் கலைஅலுவல்கள்அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க, வேலணை ஜோதிடர் வி.ஏ.சிவராசாவிற்கு ஜோதிடர் வித்யாரத்னா விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் அருகிவரும் நண்டுகளும் மீன்களும்

(கொழும்பு)

இலங்கையில் அருகி வரும் பலவகையான நன்னீர் உயிரினங்கள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதாகவும் நன்னீர் நண்டு வகைகள் பலவும் அடங்குவதாகவும் மட்டக்களப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறை பேராசிரியர் டாக்டர் பி.வினோபாபா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மாத்திரமே உரித்தான இந்த நன்னீர் உயிரினங்கள் பல இவ்வாறு அருகுவதற்கு அவை கடத்தப்படுவது மாத்திரமன்றி வேறு காரணங்களும் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக இலங்கைக்கே உரித்தான நண்டுகள் மாத்திரமன்றி மட்டக்களப்பில் பிரபலமாகப் பேசப்படும் பாடும் மீன்களும் தற்போது அருகி வருவதாகவும் அவர் கூறுகிறார்.

வெளிநாடுகளில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட திலாப்பியா (செல்வன் அல்லது ஜப்பான் மீன்) வகை மீன்களும் இந்த பாடும் மீன்களின் அழிவுக்கு ஒரு காரணம் என்றும் வினோபாபா சுட்டிக்காட்டியுள்ளார்.


அவற்றைவிட மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள், நீர் நிலைகளின் ஆழம் குறைதல், வயல்களில் பயன்படுத்தப்படும் இரசாயன உரவகைகள் ஆகியனவும் இந்த மீன்வகைகள் மற்றும் நண்டு இன வகைகள் அழிவதற்கு காரணம் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கைக்கே உரித்தான 50 வரையிலான நன்னீர் இன நண்டு வகைகள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூனியக்காரியின் பரிசுகள்



ஒரு காட்டில் ஒரு குரங்கு வசித்து வந்தது. நன்கு செழித்து வளர்ந்த காடாக இருந்ததால் அதற்கு வேண்டிய பழங்கள் அனைத்தும் அங்கு நிறையக் கிடைத்தன. தவிர குரங்குக்கு அநேக நண்பர்களும் இருந்தனர். அதனால் காட்டுவாசம் அதற்கு மிகவும் பிடித்திருந்தது.

ஆனால் சில ஆண்டுகளுக்குப்பின் காலம் மாறியது. தொடர்ந்து சில ஆண்டுகள் மழை பெய்யாததால் காட்டில் வறட்சி ஏற்பட்டது. தண்ணீர் இன்றி, செடி, கொடிகள் வாடின. மரங்களில் பழங்கள் மிகக் குறைவாகவே விளைந்தன. அதனால் குரங்கின் நண்பர்கள் அந்தக்காட்டை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர். வேறுவழியின்றி குரங்கும் ஒரு நாள் அந்தக்காட்டை விட்டு வெளியேறியது.

தனியாகத்தான் மட்டும் வெளியேறியதால் எங்கு போவது என்று யோசனை இல்லாமல் ஏதோ ஒரு திக்கில் செல்ல அந்த வழி மலைகளை அடைந்தது. மலைகள் சூழ்ந்த அந்தப் புதிய இடத்திலும் பசுமை மருந்துக்குக்கூட இல்லை. அது கண்டு குரங்கு பெருத்த ஏமாற்றம் அடைந்தது. அப்படியே பட்டினி கிடந்து உயிரை விட வேண்டியிருக்குமோ என்று நினைத்து மனமுடைந்து கோவெனக் கதறியழ ஏன் அழுகிறாய்? என்று யாரோ அழைப்பது

## அம்புலிமாமா கதைகள்

கேட்டுத் திரும்பிப் பார்த்தது.

ஒரு கிழவி அதன் எதிரே நின்று கொண்டிருந்தாள். குரங்கு தன் சோகக்கதையை அவளிடம் கூற அவள் நான் உனக்கு நிறைய சோறு போடுகிறேன். நான் சொல்லும் வேலைகளைச் செய்தால்போதும் என்று அதை அழைத்துக்கொண்டு சென்றாள். மலைகளினிடையே ஒரு சிறிய குகை வழியாக அவள் செல்ல குரங்கும் பின் தொடர்ந்தது. குகையிலிருந்து மறுமுனை வழியாக வெளியே வந்தவுடன் மற்றொரு புதிய பகுதி தென்பட்டது. அங்கு பார்த்தால் கண்களையே நம்பமுடியாத அளவுக்குப் பசுமையான மரம், செடி, கொடிகள் இருந்தன. ஒரு பெரிய விசாலமான தோட்டமும் தோட்டத்தின் மையத்தில் ஒரு சிறிய வீடும் இருந்தன.

அதுதான் என்வீடும் தோட்டமும் என்ற கிழவி தொடர்ந்து என் தோட்டத்தை நான் மிகவும் நேசிக்கிறேன். சமீபத்தில் சில ஆண்டுகளாகவே முன் போல் களைகளினால் தோட்டத்தில் ஆனால் செடிகள் சரியாக வளராமல் ஏராளமான களைகள் முளைக்கின்றன. களைகளைப் பிடுங்கி தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுதான் உன் வேலை! என்றாள் கிழவி. குரங்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டது. காட்டில் பட்டினியுடன் தவிப்பதைவிட தோட்டவேலை செய்து வயிறு நிறைய சாப்பிடுவது எவ்





வளவோ மேல் என்று குரங்கு எண்ணியது. தவிர உனக்காக தேடியலைந்து சிரமப்படாமல் வேளா வேளைக்கு கிழவியே உணவளித்தது நிம்மதியாக இருந்தது.

நாட்கள் செல்லச்செல்ல குரங்குக்கு சில விடயங்கள் தெரியவந்தன. முதலாவது கிழவி சாமானியமானவள் அல்லவென்றும் அவள் மாயு மந்திரம் தெரிந்த சூனியக்காரி என்றும் தெரிய வந்தது.

தவிர மனிதர்களுடைய பேசும் மொழியும் ஏனைய விலங்குகள் பேசும் மொழியும் அறிந்து கொள்ளும் ஆற்றலும் தனக்குக் கிழவியின் மந்திர சக்தியின் மூலம் கிடைத்ததும் தெரிய வந்தது. குரங்கு பேசுவதும் கிழவிக்கு மிக நன்றாகப் புரிய ஆரம்பித்தது.

ஆண்டுகள் உருண்டோடின. குரங்குக்கு தான் பிறந்து வளர்ந்த காட்டுக்கே திரும்பிப்போகும் ஆசை மெல்ல மெல்லத்தோன்றியது. தன்னுடைய தாய் மண்ணை விட்டுப் பிரிந்திருப்பது கஷ்டமாகத்தோன்ற ஆரம்பித்தது. ஒருநாள் மெதுவாக அது கிழவியிடம் அதைப்பற்றி பேச்சை ஆரம்பித்தது.

தொந்தரவு இல்லை. செடிகள் அனைத்தும் மரமாக மாறியிருந்ததால் தினமும் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியமும் இல்லாமல் போயிற்று.

அதனால் அவள் குரங்குக்கு விடை கொடுக்க இசைந்தாள். போகுமுன் தன் அன்புப் பரிசாக ஒரு தாரை, ஒரு வில், ஓர் அம்பு ஆகியவற்றைக் கொடுத்தாள். அவற்றால் தனக்கு என்ன உபயோகம் என்று நினைத்த குரங்கு அவற்றைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை.

குரங்கின் எண்ணத்தைப்புரிந்து கொண்ட சூனியக்காரி குரங்கே! நான் உனக்குக் கொடுத்த பரிசுகளைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அவற்றின் மதிப்பு தெரியுமா உனக்கு? சொல்கிறேன் கேள்! எத்தனை பெரிய மிருகமாக இருந்தாலும் நீ அதன் மீது ஒரு அம்பு விட்டால்போதும். அது இறந்துவிடும். அந்தத் தாரையை வாயில் வைத்து ஊதினால் அதைக்கேட்கும் எந்த மிருகமும் நடனமாடத் தொடங்கும். நீ ஊதுவதை நிறுத்தும் வரை ஆடும்! அவையெல்லாம் உனக்கு மிகவும் பயன்படும். நீ இத்தனை நாள் எனக்காகப் பாடுபட்டு வேலை செய்ததற்கான பரிசுகள் அவை! சென்று வா! என்று விடை கொடுத்தாள்.

அவற்றைப் பெற்றுக்கொண்ட குர



ங்கு குதூகலத்துடன் ஆடிப்பாடிக் கொண்டு காட்டுக்குச் சென்றது. காட்டில் நுழைந்தவுடனேயே அது ஒரு மலைப் பாம்பின் வாயில் சிக்கவிருந்தது. நல்லவேளை அது தன்னை வாயால் கௌவும்முன் பார்த்துவிட்டகுரங்கு அதன்மீது ஓர் அம்பு எய்தது. அம்பு பட்டவுடன் மலைப்பாம்பு சுருண்டு விழுந்து இறந்தது. பின்பு அதன் உடலிலிருந்து அம்பைப் பிடுங்கியெடுத்துக்கொண்டு தன் பழைய இருப்பிடத்தை நோக்கிச்செல்லத் தொடங்க திடீரென மரத்திலிருந்து குதித்த ஒரு கரடி குரங்கைத் தாக்க ஓடிவர குரங்குக்கு அம்பு எய்ய நேரமே கிடைக்கவில்லை. உடனே அது புத்திசாலித்தனமாக வாயில் தாரையை வைத்து ஊத, தாரையொலி கேட்டு கரடி நடனமாட ஆரம்பித்தது. குரங்கு நிறுத்தாமல் ஊத, விரைவிலேயே கரடி களைப்படைந்து சுருண்டு விழுந்து விட்டது.

காட்டில் தன் பழைய இருப்பிடத்தை அடைவதற்குள் இத்தனை சோதனைகளா என்று எண்ணிய குரங்கு, நீர் அருந்த ஆற்றில் இறங்கியது. இறக்குமுன், தனக்குக் கிடைத்த பரிசுகளை வேறு யார் கண்ணிலும் படாமல் மரத்தில் ஒளித்துவைத்து விட்டு ஆற்றில் இறங்கியது. அதுதான் தவறாகி விட்டது. திடீரென ஓர் ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைப் பிடித்து விட்டது.

குரங்கிடம் அப்போது தாரையுமில்லை, அம்புமில்லை. உடனே சாமர்த்தியமாக ஓநாயே! நோஞ்சானான என்னை விட்டுவிடு! உனக்கு ஒரு கொழுத்த கரடியைக் காட்டுகிறேன். அது நகரமுடியாமல் சுருண்டு கிடக்கிறது என்று சொல்லி, சற்றுத்தொலைவில் தரையில் மயங்கிக் கிடந்த கரடியைக் காட்ட குரங்கு குடுகுடுவென ஓடி மரத்தில் ஏறியது.

மரத்தில் பத்திரமாக ஏறிக் கொண்டபின், தாரையை எடுத்து ஊத, ஓநாய் தன்னை மறந்து ஆட ஆரம்பித்தது. உடனே குரங்கு கரடி மீது அம்பு செலுத்தி அதைக் கொன்று விட்டு அதன்பின்பு தன்னை மறந்து ஆடிக்கொண்டிருந்த ஓநாய் மீது அம்புவிட்டு அதையும் கொன்றது.

காட்டில் தான் எப்போதும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உணர்ந்த குரங்கு தான் இதற்கு முன் செய்த தவறை மீண்டும் செய்யாமல் இருக்க வேண்டும் என்ன செய்வது என்று பலமாக யோசித்தது. அதன்படி ஒரு நல்ல யோசனை உதிக்க, தாரையை ஒரு கயிற்றுடன் பிணைத்து தன் கழுத்தில் எப்போதும் தொங்கவிட்டுக் கொண்டது. வில், அம்பை தன்னுடைய தோளுடன் சேர்த்துப் பிணைத்துக் கொண்டது. அதன் பின்னால் அது நிம்மதியாக காட்டில் உலவ ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 22 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## அன்னைக்கே விழுந்துருச்சு விரிசலுக்கான விதை...

முத்துமணி- லட்சுமி கல்யாண மாகி அட்டணம்பட்டிக்கு வந்த அன்னைக்கே விழுந்துருச்சு விரிசலுக் கான விதை.

படிக்காத மாமன்- மாமியாளுக் குப் பத்தாவது பெயிலாப்போன படிச்ச மருமக அமையிறதுன்னா லேசா? அதுலயும் வசதியான வீட்டுப் பிள்ள; கழுத்தடங்காம நகைபோட்டு வந்த கழுதை.

மூணு தலைமுறையாப் பொழச்ச பொழப்புக்கு மொதல்மொதலா வீட்டு வாசல்ல வந்து நிக்குது காரு. மொளகாப் பழநிறத்த வெளியெல் லாம் வீசியடிக்கிற காரு. 'மருமக வீட்டுக்காரு. மகனுக்குப் பாத்தியப் பட்ட காரு. கூடமாக ஒரு ஓரமா நம்மளுக்கும் ஒரு பங்கு இருக்கிற காரு' கருத்தமாயும் சிட்டமாவும் குளுந்துபோனாக குளுந்து.

ஓடியாடி வேலை செய்யிறா; சீலையிலயே தடுக்கி விழுந்துருவா போலயிருக்கு சிட்டம்மா. பழுத்தும் பழுக்காத ஒரு செங்காய வாழைப் பழம்ங்கற பேர்ல எடுத்துக் கையில் குடுத்துட்டு, பால் சுட வைக்கப் பாத்திரம் தேடி அலையிறா.

'இதான் உங்க வீடா' ங்கற மாதிரி புருசனைப் பாத்துப் பொய்யா ஒரு சிரிப்புச் சிரிச்சிட்டு, தாமரைப் பூவை விட்டுச் சேத்துல விழுந்த லட்சுமி மாதிரி லச்சையா உக்காந்திரிக்கா லச்சுமி.

அதிரசம் முறுக்கு வச்ச கிண்ணத்த அட்டத்துல வச்ச சிட்டம்மா "யாத்தே! என் மருமக மூஞ்சி 'குப்பு'ன்னு வேர்த் துருக்கே!"ன்னு சொல்லி மூஞ்சி துடைக்க முந்தானைய ஒத றுனா. அந்தக் குப்புங்கற வார்த் தையச் சொல்ல உதடு குவிஞ்சதுல மருமக மூஞ்சியில புளிச்சுன்னு தெறிச்சு விழுந்து போச்சு வெத்தல எச்சி. அதுல ஒரு பாக்குத்தூள் வேற ஓடி விழுந்துருச்சு லச்சுமி கண்ணுக் குள்ள.

"அய்யய்யோ!" துடிச்சுட்டா மருமக. முந்தானையில அழுத்தி மூஞ்சி துடைச்சுவிட்டா மாமியா. சமையலுக்கு உரிச்ச வெங்காயம் குழம்புல கெடக்குதோ இல்லையோ- அவ கொசுவத்துல கெடந்திருச்சு. கண்ணுல உறுத்தல்; மூக்குல எரிச்சல்; ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளுனா மாமி யாள. ஓடி ஒரு சாக்கு மூடையில விழுந்துபோனா சிட்டம்மா.

கண்ணெரிச்சல் தீரல லச்சுமிக்கு.

கழுவுறா கழுவுறா அண்டாவுல அடித்தண்ணி தீருமட்டும் கழுவுறா.

"இந்தா தாயி! இதப் போட்டுக் கழுவு"

கீழவிழுந்த கெழவி கைய ஊனிக் கால ஊனி எந்திரிச்சு எடுந்தாந்து குடுத்த சோப்ப வாங்கிப் பாத்தான் முத்துமணி.

அது துணிக்குப் போடற சோப்பு. "ஏ கெழவி! எம் பொண்டாட்டியக் கொல்லப் பாக்குறியா? ஒழுங்கா ஓடிப் போயிரு."

ஆத்தாள முத்துமணி வேற ஒரு தள்ளுத் தள்ளவும் ஓடி விழுந்தவ ஒக்காந்து போனா.


சுடவச்ச பால ரெண்டு ஆத்து ஆத்தி நுரையோட கொண்டாந்து குடுக்க வந்தா- புருசன் பொண்டாட்டி ரெண்டுபேருமே இல்ல வீட்டுல; 'கடந்து போயிருச்சு காரு'ன்னு காட் ரோட்ல சொன்னாக.

•••••

மருமக முழுகாம இருக்கா.

வம்சம் தழைக்கப்போகுது; வாரிசு வரப்போகுது; பேரன் பெறந்தா என்ன பேரு வைக்கிறது? பேத்தி பெறந்தாப் பேரு என்ன? மண்டைக்குள்ள புழுவு குடையுது கருத்தமாயிக்கு. அதான் சரி- கடைசியா ஒரு முடிவுக்கு வந்துட் டாரு கருத்தமாயி:

பேரன் பிறந்தா 'சீனித்துரை'ன்னு வைக்கிறது முப்பாட்டன் ஞாபகமா. பேத்தி பிறந்தா- அவுக பாட்டி பேரு



துலங்கட்டும்- 'சிட்டு'ன்னு வச்சிரு வோம் செல்லமா.

தலப்பிள்ளை ஆம்பளப்பிள்ளை யாப் பெறக்கவும் தலகால் புரியல கருத்தமாயிக்கு.

'கொழகொழ'ன்னு குழஞ்சு பெறந்த குழந்தையக் காச்சுப்போன ரெண்டு கையிலயும் தூக்கி நெத்தியில மூஞ்சி வச்சு மோந்து மோந்து பாத்துக் 'கண்ணும் மூக்கும் எங்கப்பன் சாடை' ன்னு பொங்கிப் பூரிச்சு எறக்கி விட்டா- கையில சிக்குன தாத்தன் மீசையப் புடிச்சுக்கிட்டு [illegible] புள்ள.

"ஏலே! உங்கப்பன் புடிச்ச புடியில இருந்தே நான் இன்னும் மீண்டபாடில்ல; நீ வேற புடிச்சு நிக்கிறியா?" அவராச் சொல்லிச் சொல் லிச் சிரிச்சு விழுந்து போனாரு கருத்தமாயி.

லேசா விசயத்துக்கு வந் தாரு.

"ஏப்பா! எம் பேரனுக்குப் பேரு வைக்கணுமே"

"அதெல்லாம் வச்சாச்சு"

"வச்சாச்சா...?" சிரிப்பு செத்துப்போச்சு கருத்தமாயி மூஞ்சியில.

"பிள்ளை பெறத் தெரிஞ்ச எனக்குப் பேரு வைக்கத் தெரியாதா? வச்சிட் டேன்."


"என்னா பேரு?"

"அஜய் தேவ்"

மூஞ்சி இருளடைஞ்சு போச்சு தாத்தனுக்கு. கான மொளகாச் செடியத் தின்ன கன்னுக்குட்டி மாதிரி தலைசுத்திப் போனா சிட்டம்மா.

'ஜா' வராது நம்ம சனங்களுக்கு 'ராஜா'ன்னு சொல்ல மாட்டாக; 'ராசா'ன்னுதான் சொல்லுவாக. 'ரோஜா'ன்னு சொல்லச் சொல்லுங்க; 'ரோசா'தான் வாயில வரும். 'எம்ச்சி யார், சிவாசி'ன்னு சொல்லித்தான் பழக்கம் நம்ம நடிகர்கள.

"பேரு வச்சிருக்கான் பாரு பேரு- வாயிலயே நொழையாத பேரு மூளை யிலயா ஏறப் போகுது? பேருன்னா வெறும் பேரா? அதுல ஊரும் மண் ணும் ஒட்டியிருக்கணுமா இல்லையா? பேருல நம்ம ரத்தமும் வேர்வையும் கலந்து ஒரு வாடை அடிக்கணுமா இல்லையா? வம்சவரலாறு இருக்குடா ஒரு பேர்ல. பேருங்கறது வெறுஞ் சத்தமா? சரித்திரமடா. ஒட்டாத பேரு [illegible] ஒட்டுமா உதட்டுல?"



துயருறும் தாய்

தனக்காக அல்ல
தன் திரிக்கரு சிதைவதை
எண்ணியே அந்தத்
தாய் அழுகிறாள்...

மேனியில் தீ விழுந்து
நரம்புதான் எரியும்...
இங்கோ, நரம்பிலே
தீ விழுந்து மேனி எரிகிறது...

"வெள்ளைக்காரன் எவனாச்சும் விருமாண்டின்னு பேரு வைக்கி றானா? டி.வியில சொல்றாகல்ல அமெரிக்க சேனாதிபதி ஒபாமான்னு- அந்தாளு பொண்டாட்டி பேரு ஒச் சமா-ன்னு வச்சா நல்லாயிருக் கும்ல... வச்சிருக்காளா? சரிஅதை விடு. வடநாட்ட எடுத்துக்க. பெரியக்கான்னு பேரு வைக்குமா பிரியங்கா? தண்டுச் சாமின்னு வப்பானா டெண் டுல்கரு? அவுக ஊரு மண்ணு பரம்பரையை ஒட்டித்தான வச்சிருக்காக. நாம மட் டும் மாறிப்போனா மூதாக்க மாருவிட்ட மூச்சு வீணாப் போகும்டா" சொல்லித் தான் பாத்தாரு கருத்தமாயி. "சோலியப் பாரு"ன்னுட்டான் முத்துமணி.

அதுக்குப் பெறகு எதுலயும் அவுக தலையிடறதில்ல.

பொட்டப்புள்ள ஒண்ணு பொறந் துச்சு. 'ரூப்கலா'ன்னு பேரு வச்சுக் கிட்டாக.

பேரன் பேத்தி வளந்து வெவரம் தெரிஞ்சு வீட்டுக்கு வார போதெல் லாம் 'வாடா தங்கம் அசய்தேவு'ன்னு கூப்புடுவாரு கருத்தமாயி.

பேத்திய 'வாடி என் சக்களத்தி ரூப்பு'ன்னு கூப்புடுவா சிட்டம்மா.

'யாரையோ கூப்புடுறாக'ன்னு நெனச்சுப் 'பெறாக்கு'ப் பாத்து நிக்கும் பிள்ளைக.

"என் பிள்ளைக பேரை மாத்திக் கெழவனும் கெழவியும் அசிங்கப் படுத்துறாக"ன்னு வெளிய அழுதுட்டு, வீட்டுக்குள்ள போயிக் கதவடைச்சுச் சிரிப்பா லச்சுமி.

•••••

தொழுவுல சாணி அள்ளிக்கிட் டிருந்தா சிட்டம்மா. கையில ரொட்டி வச்சுத் தின்னுக்கிட்டே கோழிக் குஞ்சுகள விரட்டி விட்டுக்கிட்டி ருந்தா ரூப்கலா.

கோழிக்குஞ்சு மேல கண்ணு பொண்ணுக்கு; அவ கையில வச்ச ரொட்டி மேல கண்ணு பூனைக்கு.

குழந்தை கவனமெல்லாம் கோழிக் குஞ்சு மேல இருந்த சமயம் பாத்து மளார்னு தவ்வி அவ கையில இருந்த ரொட்டியைப் புடுங்கிருச்சு பூனை.

பயந்து நடுங்கிப் போன குழந்தை வீல்னு கத்தி விழுந்துருது.

"யாத்தே என் பேத்தி!"

விளக்கமாத்தை வீசியெறிஞ் சிட்டுக் கீழ விழுந்த பிள்ளைய ஓடி வந்து தூக்கிட்டா சிட்டம்மா உச்சு னாப்புல. என்னமோ ஏதோன்னு ஆத் தாக்காரி உள்ளயிருந்து ஓடி வந்து பாத்தா- பிள்ள உடம்பெல்லாம் சாணி. பேத்தியத் தூக்க ஆத்திரத்துல ஓடி வந்தவ கையக் கழுவிட்டா வர முடியும்?

மாமியாளக் கட்டி ஏறிட்டா மருமககாரி.

"சீ படிக்காத சிறுக்கி! ஒரு நாகரீகம் வேணாம்? என் மக என்ன உன் வீட்டுக் குட்டிச் சுவரா? சாணி தட்டறதுக்கு..."

சிட்டம்மாவுக்கா பேசத் தெரியாது? ஆனா பேசல. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை அதிகமாக தாக்கும் குருதிச்சோகை

இரத்தச்சோகை என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? கட்டாயம் நாம் இது பற்றி தெரிந்திருக்க வேண்டும். காரணம் எமது உடலின் சீரான இயக்கம், உற்சாகம் மற்றும் அதன் திடகாத்திரம் என்ப



னவற்றில் இது பெரும் தாக்கத்தினை செலுத்துகின்றது. அனீமியா என்று சொல்லப்படும் இந்த இரத்தச் சோகையானது எமது கோப உணர்வை அதிகரிப்பதுடன் உடல் சோர்வு, தலைவலி, மயக்கம் போன்ற பல்வேறு வகையான பிரச்சினைகளை எமக்குள் ஏற்படுத்துகின்றது.

எமது உடலில் செங்குருதி சிறுதுணிக்கைகள் எனப்படும் குருதிக் கலன்களில் ஈமோகுளோபின் எனப்படும் இரசாயனப் பதார்த்தம் சுரக்கின்றது. இது நாம் சுவாசிக்கும் ஒட்சிசனை குருதியிலிருந்து பிரித்தெடுத்து உடலின் பல்வேறு அங்கங்களுக்கு கொண்டு செல்கின்றது.

இவ்வாறு செல்லும் ஒட்சிசனானது எமது உடலில் காணப்படும் குளுக்கோசை எரித்து உடம்பின் இயக்கத்திற்குத் தேவையான சக்தியை பிறப்பிக்கின்றது. இச் சக்தியை பெற்றே எமது உடம்பு சீராக இயங்குகின்றது. எனவே, உடம்பின் இயக்கத்திற்கு அடிப்படையாய் அமையும் இந்த ஈமோகுளோபினின் அளவு குறைவதால் உடலில் ஏற்படும் பாதிப்பே இரத்தச்சோகை எனப்படுகிறது.

இரத்தச்சோகை ஏற்படுமாயின் எமது உடற்கலன்களுக்கு தேவைப்படும் ஒட்சிசனின் அளவில் பாதிப்பு ஏற்படும். எனவே, உடல் இயக்கத்திற்குத் தேவையான சக்தி பிறப்பாக்கம் தடைப்படும். இதனால் உடல் சோர்வடைவதுடன் தலைவலி, தலைச்சுற்று என்பனவும் ஏற்படும்.

இந்நிலைமை அதிகரிக்கும் சந்தர்ப்பங்க




ளில் மயக்கம் ஏற்படுவதுடன் சில வேளைகளில் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடும். இவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்த இரத்தச்சோகையானது ஏன் ஏற்படுகின்றது? யாரை இது அதிகளவில் தாக்குகின்றது? அதனை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம்? என்பது பற்றி தெரிந்து கொள்வோம்.

குருதிச்சோகைக்கான பிரதான காரணம் இரும்புச் சத்து மற்றும் விற்றமின் B12 போன்றவற்றின் குறைபாடு தான். அத்துடன் உடம்பிலிருந்து அதிகமாக இரத்தம் வெளியேறும் பட்சத்தில் ஈமோகுளோபினின் அளவு குறைவடைந்து குருதிச் சோகை ஏற்படலாம். பெரும்பாலும் பெண்களையும் சிறுவர்களையுமே இது அதிகம் பாதிக்கின்றது. பெண்களுக்கு பூப்பெய்துகின்ற தருணத்திலும் மாதவிடாய் காலங்களிலும் அதிகளவிலான இரத்தப் போக்கு ஏற்படுகின்றது. இதனால் ஈமோகுளோபினின் அளவு குறைவடைந்து குருதிச் சோகை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

இதனை தவிர்த்துக் கொள்வதற்கான ஒரே வழி இரும்புச் சத்துள்ள உணவுகளை அதிகளவில் உண்பதுதான். கோழி, மீன், இறைச்சி போன்றவற்றில் இரும்புச் சத்து அதிகம் காணப்படுகின்றது. அத்துடன் எமது உடலும் மாமிசங்களில் இருக்கும் இரும்புச் சத்தினை இலகுவாக அகத்துறிஞ்சும் தன்மை கொண்டது. பெரும்பாலும் மாமிச வகைகளை சாப்பிடுபவர்களுக்கு இரத்தச்சோகை ஏற்படுவது குறைவு.

அப்படியென்றால் சைவ உணவுகளை சாப்பிடுபவர்களுக்கு இரத்தச் சோகையிலிருந்து விடுதலை இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். மரக்கறி வகைகளைப் பொறுத்த மட்டில் கீரைகளிலேயே இரும்புச்சத்து அதிகமாக இருக்கின்றது. ஆனால், மாமிசங்களைப் போன்று இவற்றில் இருக்கும் இரும்புச் சத்துக்களை உடல் முழுமையாக அகத்துறிஞ்சுவது இல்லை. எனவே, சைவ உணவுகளை சாப்பிடுபவர்கள் கீரைகளை சமைக்கும் போது சிறிதளவு தேசிக்காய் சாற்றை பிழிந்து விட்டு சாப்பிடுவதுடன் சாப்பிட்டதன் பின்னர் புளிப்புச் சுவையுள்ள தயிர் மற்றும் பழங்களை சாப்பிடலாம். இதன்மூலம் உணவில் உள்ள இரும்புச்சத்தினை முழுமையாக உடல் அகத்துறிஞ்சுகிறது.

அத்துடன் உணவில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் கல்சியத்தையும் இரும்புச் சத்தையும் ஒன்



றாக உண்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே உங்கள் உடலும் களைப்புக்குள்ளாகி சோர்ந்து காணப்படுவதுடன் மயக்கமும் ஏற்படுமாயின் அது குருதிச் சோகைக்குரிய அறிகுறியாக கூட இருக்கலாம். எனவே, உடன் வைத்தியரை நாடுவதுடன் அவரின் ஆலோசனையுடன் தகுந்த சிகிச்சைகளையும் உணவுப் பழக்கவழக்கங்களையும் பின்பற்றி குருதிச்சோகையிலிருந்து விடுபட்டு திடகாத்திரமாக வாழ வழி செய்து கொள்ளுங்கள்.

# வெள்ள அனர்த்தத்தினால் உழுந்து செய்கையும் நாசம்

## செய்கையாளர்கள் கவலை

வெள்ள அனர்த்தம் பாதித்த வவுனியா மாவட்டத்தில் உழுந்து பயிர்ச் செய்கை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக உழுந்து பயிர்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் உழுந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு சில நாட்களிலேயே மழை தொடர்ச்சியாக பெய்ததனால் சிறு பயிராக இருந்த நிலையிலேயே பயிர்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்தது. எனினும் அந்தப் பயிரை தாம் தொடர்ச்சியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்ததனால் சில பிரதேசத்தில் பயிர் வளர்ந்த போதிலும் அது பூத்து காய்க்கும் நிலையில் மீண்டும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது.

இதனால் பூக்கள் கொட்டிவிட்டன. பயிர்கள் வளர்ந்துள்ள போதிலும் அவற்றில் காய்களை காணமுடியவில்லை எனவும் கவலை தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் விளைச்சல் சிறப்பாக இருந்த போதிலும் இவ்வருடம் இவ்வாறான நிலை ஏற்பட்டமையினால் தமது ஜீவனோபாயம் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கும் அவர்கள் இது தொடர்பில் விவசாய திணைக்களம் கவனமெடுத்து தமக்கென நட்டஈடுகளை வழங்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் தாம் உழுந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட உந்துலாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ்வருடம் பல ஏக்கர் உழுந்து பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளதுடன் இவற்றில் 50 வீதமானவை பகுதியளவிலும்ஏனையவை முற்றாகவும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-2)

# இராமேஸ்வரம் மற்றும் இலங்கை மீனவர்கள் இடையே கடும் மோதல்

(மன்னார்)

இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்த இராமேஸ்வரம் மீனவரின் வலையை வெட்டி கடலுக்குள் மூழ்கடித்ததோடு அவர்களின் படகில் இருந்த இறால் மற்றும் நண்டுகளை இலங்கை மீனவர்கள் பறித்து சென்றுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். இவர்கள் மீன்வளம் நிறைந்த இலங்கை பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டனர்.

அப்போது பேசாலை, மன்னார், காட்டு மன்னார், நெடுந்தீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்களின் வலைகளை சேதப்படுத்தியுள்ளனர்.

இதில் ஆத்திரமடைந்த இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களின் படகை சுற்றி வளைத்து படகிற்குள் இருந்த மீன்பிடி வலைகளை வெட்டிசேதப்படுத்திகடலில்மூழ்கடித்தனர்.

அதுமட்டுமின்றி இறால் மற்றும் நண்டுகளையும் பறிமுதல் செய்ததோடு "இனிமேல் இந்த பகுதியில் மீன்பிடிக்க வந்தால் படகை தீ வைத்து கொளுத்தி விடுவோம்" என எச்சரித்தும் அனுப்பியதாக நேற்று கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# 172 கழிவு தேயிலை மூடைகளை பொலிஸார் கைப்பற்றினர்

வத்தளை பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 172 கழிவு தேயிலை மூடைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்யதுள்ளனர்.

ஹேகித்த பிரதேசத்திலுள்ள குறித்த விற்பனை நிலையத்தில் கழிவு தேயிலை விற்கப்படுவதாக பொலிஸாருக்கு அண்மையில் கிடைத்த தகவல்களையடுத்து வத்தளை பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு திடீர் சோதனை மேற்கொண்டது.

இதன்போது அங்கிருந்து சுமார் 6 ஆயிரத்து 128 கிலோ எடையுள்ள கழிவு தேயிலைகளை மீட்டெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

சோதனை நடவடிக்கையின் போது விற்பனை நிலையத்திலிருந்த சந்தேகநபர் ஒருவரை கைது செய்த பொலிஸார் வத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

சந்தேக நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஆட்கடத்தலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவர்

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இவ்வாறு சட்டவிரோதமாக ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பதாக இணையத்தளமென்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் தேசிய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும், கரையோரங்களை அண்டிய பிரதேசங்களிலும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நபர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பைச் சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர் இராஜதந்திர உதவிகளைப் பயன்படுத்தி சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ஒரு நபரிடம் ஐந்து முதல் பத்து இலட்ச ரூபா அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவியாளர்கள் என்ற பெயரில் இவ்வாறு நபர்களை சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு கடத்தி சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழக் கனவை நனவாக்க அமெ.திரிசூலக்குழு வருகிறது

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் கனவை நனவாக்கும் நோக்குடனேயே அமெரிக்கா தனது மூவரடங்கிய திரிசூலக்குழுவை இலங்கைக்கு அனுப்புகிறது. இதனை ஜெனீவா இராஜதந்திரச் சமருக்கு அமெரிக்கா விடுக்கும் அறைகூவலாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் மூவரடங்கிய இராஜதந்திரக் குழுவின் இலங்கைப் பயணம் குறித்து கருத்து வெளியிடும் போது குணதாச அமரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அமெரிக்கா தற்போது நாளாந்தம் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. அனைத்து வித உள்விவகாரங்களிலும் இந்த நாடு மூக்கை நுழைக்கின்றது.

உலக வல்லரசு என்ற நினைப்பில் ஆள நினைக்கும் அமெரிக்காவிற்கு நாம் ஒரு போதும் அடிபணியக்கூடாது. அமெரிக்கா இல்லாவிட்டால் என்ன இலங்கைக்குப் பக்க பலமாக தற்போது சீனா இருக்கிறது.

எனவே, அரசு சீனாவுடனான தனது உறவுகளைப் பலப்படுத்த வேண்டும். சீனாவின் பக்கம் முழுமையாக சாய்வதைவிட தற்போது வேறு வழியில்லை. அதேவேளை பிரபாகரனின் கனவை நனவாக்கும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஜெனீவா மாநாட்டில் இலங்கையை இறுக்குவதற்கு அது முயற்சிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஜெனீவா சமருக்குத் தயாராகுமாறு அறைகூவல் விடுப்பதற்கு மூவரடங்கிய இராஜதந்திரகள் குழுவை இலங்கைக்கு அனுப்புகிறது அமெரிக்க வெள்ளை மாளிகை நிர்வாகம் என்றார். (அ-2)

# நிலக்கீழ் எண்ணெய் குழாய் திட்டம் விரைவில்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலை வரை செல்லும் புதிய நிலக்கீழ் எண்ணெய் குழாய் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது காணப்படும் நிலக்கீழ் எண்ணெய் குழாய் திட்டம் 40 வருடங்கள் பழைமையானது என அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புதிய நிலக்கீழ் எண்ணெய் குழாய் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# வடக்கிலும் தெற்கிலும் முஸ்லிம்களே அதிகம் நெருக்கடிக்குள்ளாகின்றனர்

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம் மக்களே அதிகளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பொருளாதார வளங்களை சுரண்ட சில பௌத்தர்கள் முனைப்பு காட்டி வருவதாகவும் அதன் ஓர் கட்டமாகவே அண்மையில் மஹரகம பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றின் எதிரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கருத வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிலும் தெற்கிலும் ஏனைய இன மக்களினால் முஸ்லிம்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் முஸ்லிம்-சிங்கள சமூகங்களுக்குஇடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்படுவதனை தடுத்து நிறுத்த புலி ஆதரவாளர்கள் முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு மதகுரு ஒருவரும் உடந்தையாக செயற்படுகின்றார் என அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். (அ-2)

# சிறுவர்களின் சிகிச்சைக்கு தனியான மருத்துவ பிரிவு

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகளுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்காக சகல வைத்தியசாலைகளிலும் பிரத்தியேகமான பிரிவுகளை நிறுவ சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேனவைச் சந்தித்து துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பல்வேறு தொல்லைகளை எதிர்கொள்ள நேரிடுவதாகத் தெரிவித்தார்.

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட முறை தொடர்பாக விடுதிகளுக்கு வந்து பலரும் விபரம் கேட்கின்றனர். இப்படி மீண்டும் மீண்டும் அவர்களிடம் வினாக்கள் எழுப்பப்படுவதால் பிள்ளைகள் மன உபாதைகளுக்கும் ஆளாகின்றனர்.

எனவே, இந்தப் பிள்ளைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக சகல பிரதான வைத்தியசாலைகளிலும் ஓர் அறையையாவது ஒதுக்கித் தருமாறும் அவர்களின் இரகசியத் தன்மையைப் பேணி பாதுகாப்பாக சிசிச்சை வழங்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுற்றறிக்கை அனுப்புமாறும் சகல பிரதான வைத்தியசாலைகளிலும் இப்பிரிவை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் வைத்திய பணிப்பாளர்களுக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் அமைச்சின் செயலருக்கு உத்தரவிட்டார்.

இத்திட்டத்தின் முதலாவது பிரிவு பொறளை லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் ஆரம்பிக்கப்படும். (அ-2)

# பொருளாதார திட்டத்திற்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தடங்கல் ஏற்படாத வகையில் ஜப்பான் அரசு ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் திவிநெகும தேசிய வேலைத் திட்டம் வெற்றிப் பாதையில் செல்வதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இதன்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சருக்கு தெரிவித்துள்ளார். (அ-2)

# 14 ஆமைகளுடன் சீன நாட்டவர் கைது

நாரஹேன்பிட்டிய பிரதேசத்தில் 14 ஆமைகளுடன் சீன நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட தேடுதலின் போது இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பிரதேசத்திலுள்ள வாடி வீடு ஒன்றின் சிறிய அறையில் 14 ஆமைகளும் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சீன பிரஜை மாளிகாவத்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட வேளை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட ஆமைகளை தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)



512 ஆவது படைப்பிரிவினரால் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக நலத்திட்டம் தொடர்பில் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்திலுள்ள படை முகாமில் நடைபெற்றது. இதில் 51 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சந்தன குணவர்த்தன, கேணல் அஜித் பல்லேவல ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன நீதிச்சேவை...!

இலங்கையின் புதிய நீதியரசராக தனது ஆலோசகர்களில் ஒருவரான மோஹன் பீரிசை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நியமித்துள்ளார். மோஹன் பீரிஸ் முன்னர் இலங்கையின் தலைமை வழக்கறிஞராக பணியாற்றியிருந்தார். இவர் அண்மைய ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறார்.

இவருக்கு முன்னர் தலைமை நீதியரசராகப் பணியாற்றிய சிராணி பண்டாரநாயக்க மீது இலங்கை அராங்கத்தால் ஊழல் குற்றச்சாட்டு மற்றும் அரசாங்கத்தை விமர்சித்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்ட போதிலும், தான் இவ்வாறான எவ்வித குற்றங்களிலும் ஈடுபடவில்லை என சிராணி பண்டார நாயக்க கூறுகிறார்.

இலங்கை ஜனாதிபதியின் சகோதரர்களில் ஒருவரின் கீழ் நாட்டின் பொருளாதார அபிவிருத்திப் பணிகளை மத்தியமயப்படுத்துவது தொடர்பான சட்டம் ஒன்றை (திவிநெகும) அமுல்படுத்துவதற்கு தலைமை நீதியரசராக கடமையாற்றிய சிராணி பண்டாரநாயக்க மறுப்புத் தெரிவித்த நிலையிலேயே இவரை தண்டிப்பதற்கான ஒரு வழியாக இவரின் மீது இவ்வாறான அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன் மூலம் முன்னைநாள் தலைமை நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்ததாகவும் விமர்சனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், இந்த விமர்சனத்தை இலங்கை ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் மோகன் சமர நாயக்க மறுத்துள்ளதுடன் "முன்னைநாள் தலைமை நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையானது திவிநெகும திட்டத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. சிராணி பண்டாரநாயக்க மீது 14 வகையான துர்நடத்தைக் குற்றங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், இலங்கை நாடாளுமன்றின் 117 உறுப்பினர்கள் ஏகமனதாக இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தனர்" என மோகன் சமரநாயக்க கூறுகிறார்.

"நீதிப்தி ஒருவர் இந்த வகையில் பதவி நீக்கப்படும்போது ஏனைய நீதிபதிகளும் அச்சத்துடனேயே பணிபுரிய வேண்டும். எதிர்காலத்தில் நீதிமன்றத்துறையில் எவ்விதமான தலையீடுகள் மேற்கொள்ளப்படும் என்பது இவர்களுக்குத் தெரியாது. இவ்வாறான ஒரு சூழலில் சுயாதீன நீதிச்சேவயை எவரும் எதிர்பார்க்க முடியாது" என சட்டவாளரும் செயற்பாட்டாளருமான வெலி யாமுன தெரிவித்துள்ளார்.

சிராணி பண்ணடாரநாயக்க மீதான 14 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கடந்த நவெம்பரில் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கையளித்தனர். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு இறுதியில் இவர் குற்றவாளி என்பதை உறுதிப்படுத்தியது.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் பதிலளிப்பதற்கு தமது தரப்பு வாதியான பண்டாரநாயக்கவுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்படவில்லை எனவும் இவர் தொடர்பான சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கான அனுமதிகூட வழங்கப்படவில்லை எனவும் இந்நிலையில் இவருக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதாகவும், சிராணி பண்டாரநாயக்காவுக்கு ஆதரவான சட்டவாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

"நான் சுயாதீன நீதிச்சேவையை நிலைநாட்டுவதற்காக குரல் கொடுத்துள்ளவர் என்ற வகையில் இவ்வாறு எனக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள அநீதியான குற்றச்சாட்டுகளை எண்ணி நான் தேனைப்படுகிறேன். இக்குற்றச்சாட்டுக்களை நான் முற்றிலும் மறுக்கிறேன்" என சிராணி பண்டாரநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றமானது அங்குள்ள அரசாங்கக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்திருந்தது.

"முன்னைநாள் நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசியல் யாப்புக்கு உட்பட்டதாகும். ஆகவே இது சட்ட ரீதியானதாகும். இலங்கையில் உயர்மட்டப் பதவிகளில் உள்ள அதிகாரிகள் தொடர்பான திர்மானங்களை நாடாளுமன்றமே எடுக்கின்றது. இந்நிலையில் குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் முன்னாள் தலைமை தீதியரசரும் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்" என ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் சமர நாயக்க நியாயப்படுத்துகிறார்.

இலங்கை அதிபரின் கையெழுத்துடன் சிராணி பண்டாரநாயக்க பதவியிலிருந்து நீக்கப்பட்ட கையோடு மோஹன் பீரிஸ் புதிய தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டார். நூற்றுக்கணக்கான காவல்துறையினர் மற்றும் சிறப்பு படையினரின் பாதுகாப்போடு மோஹன் பீரிஸ் தனது புதிய பணியை ஆரம்பிப்பதற்காக தனது பணியகத்திற்குச் சென்றார்.

சிராணி பண்டார நாயக்க தனது பணியகத்திற்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் இவருக்குப் பதிலாக நீதிமன்ற பணியாளர்கள் இவரது முன்னைய பணியகத்தை சீர்ப்படுத்தி புதிய நீதியரசரிடம் கையளிக்குமாறு கட்டளையிடப்பட்டது.

இலங்கையின் இரு முக்கிய ஜனநாயகத்துறைகளான நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகிய இரண்டுக்கும் இடையிலான ஒரு பனிப்போராக சிராணி பண்டார நாயக்கவின் விவகாரம் கருதப்படுகிறது. அரசியல் யாப்பில் திருத்தம் செய்கின்ற தனியுரிமையை சிறிலங்கா உயர் நீதிமன்றம் மட்டுமே கொண்டுள்ளது. இந்நிலையில் சிராணி பண்டாரநாயக்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்ட ரீதியானதல்ல.

இதேவேளையில், நாடாளுமன்றம் தனி இறைமையைக் கொண்டிருப்பதால் நீதிமன்றங்களை அனுசரித்துப்போக வேண்டிய தேவை இதற்கில்லை என ஆளும் கட்சி அறிவித்திருந்தது. "நாடாளுமன்ற சபாநாயகர் என்ற வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான மனு என்னிடம் கையளிக்கப்பட்டது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நான் நியமித்துள்ளேன். இந்த வகையில் முன்னைநாள் தலைமை நீதியரசர் பதவி விலக்கப்பட்டமை தொடர்பில் எந்தவொரு தவறும் இடம்பெறவில்லை" என இலங்கை ஜனாதிபதியின் பிறிதொரு சகோதரரும் நாடாளுமன்ற சபாநாயகருமான சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"தலைமை நீதியரசரின் செயற்பாடுகளில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சுயாதீன நீதிச்சேவையை குழப்பும் விதமாக இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது. தற்போதைய அரசாங்கத்தின்கீழ் சட்ட ஆட்சி, இயற்கையான நீதி முறைமை போன்றன மிகக் கொடூரமாமாக சிதைக்கப்பட்டுள்ளன" என முன்னைநாள் நீதியரசரான சிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

"நீதிபதி ஒருவரின் பிரச்சினையைக் கையாள்வதற்கு நாட்டின் அரசியல் யாப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு அமைவாக நடந்துகொள்ள வேண்டும்" என சட்டவாளர் வெலியாமுன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய போக்கானது நாட்டு மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தநிலை தொடர்ந்தால் எல்லாவற்றினதும் எல்லோரினதும் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாக அமையும் என அண்மைய ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்துவருபவரும் ஆனால், இலங்கை அரசாங்கத்தின் சில நகர்வுகள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளவருமான மூத்த சட்டவாளர் குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய லெப் ஜெனரல் சரத் பொன்சேகா பதவி விலக்கப்பட்டிருந்தார். அவர் இலங்கை ஜனாதிபதியை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நின்றதைத் தொடர்ந்து இவருத் இராணுவப் பதவிநிலை, ஒய்வூதியம் என்பன பறிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

"தற்போது மகிந்த ராஜபக்சவும் அவரைச் சூழவுள்ளவர்களும் அதிகாரம் என்கின்ற பானத்தை முற்றாக அருந்தியுள்ளனர். இது நாட்டுக்கு நல்லதல்ல" என குணசேகரா குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றைத் தலைமை தாங்கும் ஜனாதிபதி ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் நாட்டின் முக்கிய துறைகளின் தலைமைப் பொறுப்புக்களில் உள்ளனர். இவர்கள் தமது அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தி நாட்டை ஆளுகின்றனர்.

சிராணி பண்டாரநாயக்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையானது அனைத்துலக சமூகத்தின் கண்டனத்திற்கு உள்ளாகியதுடன், இதனை அனைத்துலக நீதிபதிகள் ஆணைக்குழு வலுவாக எதிர்த்திருந்தது. இந்நிலையில் மோஹன் பீரிஸ் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதானது நாட்டின் எதிர்கால சட்ட ஆட்சிமுறை மற்றும் பொறுப்பளித்தல் போன்றன தொடர்பாக மிக மோசமான சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டதை எதிர்த்து பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் இடம்பெற்ற போதிலும், தற்போது உயர்நீதிமன்ற நீதிபதிகள் புதிய தலைமை நீதியரசரை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. தலைமை நீதியரசர் புதிதாக பதவியேற்ற முதல்நாள் நீதிமன்ற வளாகத்தில் இவரைச் சந்தித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

"நடைமுறையிலுள்ள முறையின் படி இதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய தலைமை நீதியரசருக்கு கீழ்ப்படியாது பணியாற்ற முடியாது. மிகப் பலமான இராணுவ உத்திகள் பயன்படுத்தப்படும் ஒரு நாட்டில் இதுதான் நடக்கும்" என தனது பெயரை குறிப்பிட விரும்பாத மூத்த சட்டவாளர் ஒருவர் தெரிவித்தார்.



> "தலைமை நீதியரசரின் செயற்பாடுகளில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சுயாதீன நீதிச்சேவையை குழப்பும் விதமாக இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது. தற்போதைய அரசாங்கத்தின்கீழ் சட்ட ஆட்சி, இயற்கையான நீதிமுறைமை போன்றன மிகக் கொடூரமாமாக சிதைக்கப்பட்டுள்ளன"

மின்னெலா-ஃபெர்னாண்டெஸ்
புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# பாடசாலையை விட்டு அதிகளவான சிறுவர்கள் இடை விலகுகின்றனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் பாடசாலைக்கு செல்லாமலும் பாடசாலையை விட்டு இடைவிலகியும் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் அலட்சியப் போக்கில் நடந்து கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த வருடங்களை விட அண்மைக்காலமாக பாடசாலை கல்வியை இடைநிறுத்தும் மாணவர் களின் எண்ணிக்கை அதிகரித்திருப் பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, குடும்ப வறுமை நிலை காரணமாக சிறுவர்கள் பாடசாலை செல்லாது இருப்பதாகவும் சில மாணவர்கள் சிறுவர் தொழிலாளிகள் ஆகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பிரதேச பொலிஸ் நிர்வாகத்தினரோ, கிராம சேவையாளர்களோ, பிரதேச செயலகங்களோ இச்சிறுவர்கள் குறித்த எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை எனவும் சமூகநலன்விரும்பிகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, சிறுவர் நலன் சார்ந்த எந்தவொரு அமைப்புகளும் இப்பிரதேசங்களில் செயற்படவில்லை என குறிப்பிடும் இவர்கள் குறித்த சிறுவர்கள் தொடர்பில் உரியவர்கள் கவனம் எடுத்து செயற்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5-267)

# என்னுடைய கரங்கள் இரத்தம் படியாதவை

## அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

புயல்களை போல எனக்கு சவால்கள் வந்த போதிலும் அவற்றை எல்லாம் என்னால் வெற்றி கொள்ள முடிந்தது. இவ்வாறு பொது மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தன்னுடைய கரங்கள் இரத்தக் கறைபடியாதவை என்றும் இனியும் தனது கரங்களில் இரத்தக் கறை படியாது என்றும் தெரிவித்தார்.

களனியில் நேற்று முன்தினம் பல்வேறு பிரதேசங்களுக்கு சென்று மக்களை சந்தித்து கலந்துடையாடியதன் பின்னர் அங்குரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. புயலாக வந்த சவால்களை எல்லாம் சமாளித்தேன். மக்களுக்கு சேவை செய்வதற்கு பதவிகள் தேவையில்லை என்றார். (அ-2)

# ஆஸி.செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## கடற்படையினர் தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறைவடைந்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புதிய குடிவரவு கொள்கை மற்றும் கடற்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் ஆபத்தான வழிகளில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயற்சிக்கும் அகதிகளை தடுக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்டவிரோத குடியேறிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# ஆஸி.சென்றவர்களில் சிலர் நாடு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் மீண்டும் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் 942 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் 729 பேர் வலுக்கட்டாயமாகவும் 213 பேர் விருப்பத்தின் பேரிலும் நாடு திரும்பியுள்ளதாக அவுஸ்திரேலிய பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மேலும் ஏழு ஆண்கள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இவர்கள் ஏழு பேரும் விருப்பத்தின் அடிப்படையிலேயே நாடு திரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




★ 1506-150 சுவிஸ் படைகளைக் கொண்ட முதற் தொகுதி வத்திக்கானை அடைந்தது.

★ 1798-நெதர்லாந்தில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★ 1840-பிரித்தானிய குடியேற்றவாதிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.

★ 1863-ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.

★ 1870-தென்னாபிரிக்காவின் சூலுப் படைகள் ஐசண்டல்வானாவில் வைத்து பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1889-கொலம்பியா கிராமபோன் வோஷிங்டனில் அமைக்கப்பட்டது.

★ 1899- ஆறு அவுஸ்திரேலிய காலனிகளின் தலைவர்கள் கூட்டமைப்பு பற்றி விவாதிக்க மெல்போர்னில் கூடினர்.

★ 1901-64ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81 ஆவது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.

★ 1905-சென். பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் லிபியாவின் டோப்ருக் நகரை நாசிப் படைகளிடம் இருந்து கைப்பற்றியது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயில் ஜப்பானியரின் குண்டு வீச்சினால் பெரும் சேதமுற்றது.

★ 1952-உலகின் முதலாவது பயணிகள் ஜெட் விமானம் (BOAC யின் Comet) சேவைக்கு விடப்பட்டது.

★ 1957-சினாய் தீபகற்பத்தில் இருந்து இஸ்ரேல் வெளியேறியது.

★ 1964-சென்னத் கவுண்டா வட றொடீசியாவின் முதலாவது ஜனாதிபதியானார்.

★ 1980-நோபல் பரிசு பெற்ற சோவியத் இயற்பியலாளர் அந்திரே சாகரொவ் மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

★ 1984-அப்பிள் மக்கிண்டொஷ் கணனி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1992-சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.

★ 1999- இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் அவுஸ்திரேலிய கிறிஸ்தவ மதப் போதகர் கிரஹாம் ஸ்டைன்ஸ் என்பவரும் அவரது இரு மகன்களும் இந்துத் தீவிரவாதிகளால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

★ 2003-பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

★ 2004-ஆர்க்குட் தொடங்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1909- ஊ தாண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் (இ.1974)

★ 1988-கிரெக் ஓடென், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்


### இறப்புக்கள்

★ 1666-ஷாஜகான், முகலாயப் பேரரசர் (பி.1592)

★ 1922-பிரெட்ரிக் பாஜெர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1837)

★ **1947-சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்தின் பன்மொழிப் புலவர் (பி.1875)**

### சுவாமி ஞானப்பிரகாசர்



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்பவர் பன்மொழிப்புலவர். தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்தியம்பியவர்களுள் ஒருவர். இலத்தீன் கிரெக்கம் முதலாய பதினெண் மொழிகளில் எழுதவும் பேசவும் வல்லவராய் இருந்தார். பல தமிழ் நூல்களின் ஆசிரியர் சொற்பிறப்பு ஒப்பியல் அகர வரிசை என்ற பெயரில் இவர் வெளியிட்ட தமிழ் ஒப்பியல் அகராதி சிறந்த நூலாகும்.

**பிறப்பு**

இவர் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த மன்னர்களுள் ஒருவரான ஆறாவது பரராசசேகரனின் வழித்தோன்றலான இராசலிங்கம் சாமிநாதப்பிள்ளை தங்கமுத்து தம்பதியினருக்கு மகனாக 30.08.1875 அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் வைத்தியலிங்கம்.

**இளமைக்காலமும் கல்வியும்**

இவர் தனது இளமைக்காலக்கல்வியை அச்சுவேலியில் அமைந்திருந்த அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலையிலும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார்.

**திருநிலைப்படுத்தப்படுதல்**

இவர் 1895 ஆம் ஆண்டு இறைபணிக்கென தம்மை அர்ப்பணித்து யாழ். குரு மடத்தில் சேர்ந்து கொண்டார். 01.12.1901 அன்று குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**நூல்கள் இயற்றல்**

இறை அர்ப்பணிப்புச் சேவையில் முதல் பங்காக ஊர்காவற்றுறை எனும் ஊரில் பணியாற்றினார். முதன் முறையாக அங்கு நூல் நிலையம் ஒன்றை உருவாக்கி மக்களிடையே படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினார்.

நல்லூரில் புனித சவேரியார் ஆலயத்தைக் கட்டியெழுப்பி பல ஆண்டுகள் பணியாற்றினார். அதனால் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என அழைக்கப்பட்டார்.

**மறைவு**

இவர்தனது71ஆவது அகவையில்உயிர்நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் தொடர்பாக பீரிஸிடம் கேள்வி எழுப்புங்கள்

## வாழ்வுரிமைக் கட்சி நிறுவுனர் கோரிக்கை

(புதுடில்லி)

**இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழுக்கூட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் போர்க்குற்றங்கள் தொடர்பாக அந்நாடு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி விசாரணை செய்ய வேண்டும் என வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுனர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றைய தினம் டில்லிக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது இந்தியா-இலங்கை இடையேயான வர்த்தக உறவு பற்றிய இரண்டு நாட்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசவுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மீது பொருளாதாரத் தடை கோரி தமிழக சட்டப் பேரவையில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் மௌனி மன்மோகன் சிங் அரசு கோடிக்கணக்கான தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்திக் கொண்டு இரத்தக் கறை படிந்த இலங்கை அரசுடன் கை குலுக்கிக் கொண்டு வர்த்தக நலம் பற்றி பேசுகிறார்களாம்.

இலங்கையில் கொன்று குவிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதிகோரி சர்வதேச சமூகமே கரிசனை காட்டி வருகிறது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் அவையத்தின் மனித உரிமைகள் ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஓராண்டாகி விட்டது.

ஆனால் ஒரு துரும்பையும் அசைத்துக் கூடப் போடாத இலங்கை அரசின் அமைச்சர்களை டில்லிக்கு வரவழைத்து இலாப நட்டக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரஸ் துரோக அரசு!

இலங்கையின் நிலப்பரப்பெங்கும் சிங்களவர் மயம்! சிங்கள மொழி மயம்! தமிழரின் சொந்தத் தாயகத்திலேயே அவர்களது குடிப்பரம்பலைக் குறைக்க திணிக்கப்படும் சிங்களக் குடியேற்றங்கள்!

இதைப்பற்றி கோடிக்கணக்கான தமிழ்நாட்டுத் தமிழர்கள் கொந்தளித்துக் குமுறுவதெல்லாம் கள்ள மௌனி மன்மோகன் சிங் அரசுக்குத் தெரியவில்லை.

இதோ அடுத்த மாதம் பெப்ரவரியில் மீண்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் கூட்டம் வருகிறது.

இப்போதும்கூட சிங்கள அரசிடம் போர்க்குற்ற நடவடிக்கைக்கான விளக்கம் கோரவில்லை மத்திய அரசு.

டில்லிக்கு வருகை தந்திருக்கும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் வர்த்தக நலன் குறித்து பேசுவதைக் கைவிட்டு தமிழர் வாழ்வுரிமை போர்க் குற்றவாளிகள் மீதான நடவடிக்கை பற்றி மத்திய அரசு பேசவேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது என்று கூறியுள்ளார். (அ-2)

## தெலுங்கானா மாநிலம் விரைவில் உருவாகும்

### இந்திய உள்துறை அமைச்சர்

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் விரைவில் உருவாகும் என கூறப்படுகிறது. தெலுங்கானா குறித்து முடிவு எடுத்து எதிர்வரும் 28 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மத்திய உள்துறை மந்திரி சுசில் குமார் ஷிண்டே அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் தெலுங்கானா அறிவிக்கப்படாவிட்டால் மாபெரும் போராட்டத்தை நடத்த தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதேபோல் தெலுங்கானா பகுதி அரசு ஊழியர்களும் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து தெலுங்கானா அரச ஊழியர் சங்கத் தலைவர் தேவி பிரசாத் கூறுகையில்,

ஆந்திராவின் 4 அரை கோடி மக்கள் தெலுங்கானாவுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள். இதற்காக எந்த தியாகமும் செய்ய தயாராக உள்ளோம். ஆந்திராவுடன் இணைந்து இருப்பதற்கு எதிராக தெலுங்கானா அரச ஊழியர்கள் 50 ஆண்டுகளாக போராடி வருகிறார்கள். மேற்படி தெலுங்கானா அறிவிக்காவிட்டால் 100 நாள் தொடர் வேலை நிறுத்தத்தில் அரச ஊழியர்கள் ஈடுபடுவார்கள். இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

## இலட்சியத்தை பெரிதாக வைத்துக் கொண்டால் நினைத்ததை சாதிக்க முடியும்- அப்துல்கலாம்

ஒவ்வொருவரும் இலட்சியத்தை பெரிதாக வைத்துக் கொண்டால் வாழ்வில் நினைத்ததை சாதிக்க முடியும் என குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.



பரமக்குடி ஆயிர வைசிய மேல்நிலைப் பள்ளியின் வைரவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து அவர் பாடசாலை மாணவ, மாணவிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் உரையாற்றுகையில்,

நீங்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை. உன்னால் வெற்றியடைய முடியும் என்பதே என் வாழ்வில் நான் கற்றுக்கொண்ட பாடம். மாணவர்களாகிய நீங்கள் சிறு இலட்சியங்களாக வளர்த்துக் கொள்ளாமல் பெரிய இலட்சியங்களாக மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அறிவு, உழைப்பு, விடாமுயற்சி, தைரியம் இந்த நான்கும் இளைஞர்கள் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியவைகளாகும்.

ஒருவர் யாராக இருந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் அவரிடம் மனஉறுதி இருந்தால் வெற்றி பெற முடியும் என்பதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும்.

மின்சாரத்தை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன், விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள், தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம் பெல், வானமும் கடலும் நீல நிறமாக இருப்பது எப்படி என்று கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்ற சேர்.சி.வி.ராமன், ரேடியத்தைக் கண்டுபிடித்து இருமுறை நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி, கணித மேதை ராமானுஜர் போன்றவர்கள் அனைவரும் அவர்களுக்கே உரிய இலட்சியங்களுடன், தனித்தன்மையுடன் வாழ்ந்ததால்தான் வரலாற்றில் இடம் பிடித்தார்கள்.

இதுபோன்று ஒவ்வொரு மனிதனும் வரலாற்றுப் புத்தகத்தில் இடம் பிடிக்க முடியும். 60 கோடி இளைஞர்கள் இந்தியாவின் மிகப் பெரிய சொத்தாக இருக்கிறார்கள். இதில் 25 கோடி மக்கள் ஆறு இலட்சம் கிராமங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் எந்தக் கிராமத்தில் வாழ்ந்தாலும் இவர்களது இலட்சியம் பெரியதாக இருந்தால் மட்டுமே வாழ்க்கையில் நினைத்தது சாதித்து வெற்றி பெற முடியும். எனவே நமக்கு அறிவைத் தரும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் நாம் மதித்து நடக்க வேண்டும் என்றார். (அ-2)

# உலகம் முழுவதும் தூக்கு தண்டனை அறவே ஒழிக்கப்படவேண்டும்

## முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

மனிதநேயத்தை உணர்த்தும் வகையில் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து மரண தண்டனை மற்றும் தூக்குத் தண்டனை ஆகியவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பவை வருமாறு,

உலகம் முழுவதிலும் தூக்குத் தண்டனை என்பது அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்று நான் கூறி வருகின்றேன். அதைப்பற்றி பலவிதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து கூறப்பட்ட நேரத்தில்கூட அவர்களுக்கு தனிமைச் சிறை ஆயுள் முழுவதும் வழங்கலாம் என்ற கருத்தினைத்தான் நான் தெரிவித்திருந்தேன்.

குறித்த சம்பவம் பற்றி எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன் விரிவாக எழுதியிருக்கிறார். இதிலே தூக்குத் தண்டனையை விட கொடுமையான தண்டனை அதுவும் ஓர் இளம் பெண்ணுக்கு. அந்தப் பெண் செய்த தவறு என்ன? அனைவரின் உள்ளத்தையும் உலுக்கின்ற அந்தக் கோரக் கொடுமை நடந்தேறி இருக்கின்றது.

ஒரு மைதானத்தில் ரிசானா நபீக் என்ற இளம் பெண்ணை கை விலங்கிட்டு பொது மக்கள் முன்னிலையில் மண்டியிட வைத்து அவள் தலையை நீண்ட அரிவாள் கொண்டு சீவி தண்டனை கொடுத்திருக்கிறார்கள். ஏன் அந்தத் தண்டனை? என்ன பாவம் செய்தாள் அந்தப் பெண்?

சர்வதேச மனித உரிமை சாசனத்தின்படி மைனர் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப் படக்கூடாது. நியாயம் வெற்றி பெறும். தான் விடுதலையாகி இலங்கைக்கே திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கையோடு இறுதிவரை ரிசானா இருந்தாள்.

மரண தண்டனை என்ற ஒரு கொடுமை ஒழிக்கப்பட்டிருந்தால் ரிசானா கொடூரமாகக் கொல்லப் பட்டிருக்கமாட்டாள் அல்லவா?

இதற்கு எப்போது விடிவு ஏற்படும்? உலக நாடுகள் எல்லாம் ஒன்று கூடி இதுபோன்ற கொடுமைகள் இனியும் நேராமல் இருக்க மானுடம் காத்திடும் மனித நேய உணர்வோடு மனித நாகரிக மாண்பினை வெளிப்படுத்தும் வகையில் முடிவெடுத்து அதனை நடைமுறைக்குக் கொண்டு வரமாட்டார்களா என தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். (அ-2)



அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணம் ஒலிம்பியா நகரில் துப்பாக்கிக் கலாச்சாரத்துக்கு எதிராக ஒன்றுதிரண்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

## சிறுவனின் துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் உட்பட ஐவர் பலி

அமெரிக்காவின் நியூமெக்சிக்கோ மாகாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 2 நபர் மற்றும் 3 குழந்தைகள் உட்பட 5 பேர் பலியாகியுள்ளனர்.

நியூமெக்சிக்கோவில் உள்ள அல்புகர்க் நகரில் நேற்று முன்தினம் மாலை இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்துள்து. 15 வயதான சிறுவன் தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியால் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த 3 குழந்தைகள் மற்றும் 2 பெரியவர்களை சுட்டுக் கொன்றான்.

இந்த சிறுவனை உடனடியாக கைது செய்த பொலிஸார் அவனிடமிருந்த துப்பாக்கிகளையும் பறிமுதல் செய்தனர். கொலை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் அவன் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அவனுடைய வீட்டை சோதனை செய்து அங்கிருந்த துப்பாக்கித் தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு அமெரிக்காவில் சிறுவர்கள் பாடசாலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 30 பாலகர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில் மற்றொரு துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்றுள்ளது. (அ-2)

## சீனாவில் கடும்பனி; போக்குவரத்து பாதிப்பு

(பீஜிங்)

சீனாவின் வடபகுதியில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால் 100 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

40இற்கும் மேற்பட்ட தேசிய பெரிய வீதிகள் நேற்று முன்தினம் மூடப்பட்டன.

பீஜிங் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய 16 சர்வதேச விமானங்கள் உள்ளிட்ட 111 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

11 வெளிநாட்டு விமானங்கள் உட்பட 68 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன என்று விமான நிலைய இணையத்தளம் தெரிவித்துள்ளது.

வடக்கு சீனாவில் 40 இற்கும் மேற்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் பனியால் மூடப்பட்டுள்ளதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

விபத்து எதுவும் நடந்ததாக தகவல் இல்லை என்று அரசு இணையத்தளம் தெரிவித்தது.

பீஜிங்கில் 8.6 செ.மீ அளவுக்கு பனிப்பொழிவு காணப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்லக்கூடாது

## இதற்காகவே திவிநெகும என்கிறார் பிரதியமைச்சர் முரளிதரன்

இலங்கையைச் சேர்ந்த 400 பேருக்கு கடந்த காலங்களில் வெளிநாடுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இனிமேல் நமது பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களுக்காகச் செல்லக்கூடாது. அதற்காகவே திவிநெகும திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட சுயதொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று (களுவாஞ்சிக்குடி) பிரதேசத்துக்கான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு உரையாற்றிய பிரதி அமைச்சர், கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரித்துக் கொள்ள இந்தத் திட்டங்களை சிறந்த முறையில் கைக்கொள்ள வேண்டும்.

வறுமை நிலையில் உள்ள மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வறுமையற்ற நிலையை உருவாக்கும் ஒரு சிறந்த திட்டமாக திவிநெகுமவின் வறுமையற்றதோர் இலங்கை தேசம் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல குளங்களை புனரமைப்புச் செய்துள்ளோம். மேலும் பல குளங்கள் புனரமைப்புச் செய்ய திட்டமிட்டுள்ளோம்.

இவைகள் அனைத்திற்கும் திவிநெகும திட்டம் பெரும் உறுதுணையளிக்கும். இத்திட்டத்தில் நமது பெண்கள் வீட்டிலிருந்தபடியே பல்வேறுபட்ட சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம். இவைகளை விடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு பெண்கள் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. இனிமேல் பெண்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கு அனுப்பக்கூடாது என்பது பற்றி ஜனாதிபதியிடமும் யுத்தத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடமும் பேசியுள்ளேன் எனவும் அவர் கூறினார்.

இதன்போது பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வறுமை ஒழிப்பு தொடர்பிலான கருத்துரைகள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து திணைக்களங்களின் ஊடாக இந்த வறுமை ஒழிப்பு செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்போது குறித்த திணைக்களங்களின் தலைவர்களினால் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

விவசாய திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், கால்நடை வளத்திணைக்களம், வங்கிகள் போன்றதுறைகளினூடாக இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## வறுமையை போக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் ரிஸானாவின் தாய் பரீனா

சவுதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்களை கொலை செய்தல், ஆணி ஏற்றுதல், அடித்தல் உள்ளிட்ட சித்திரவதைகளை தடுக்க வேண்டுமாயின் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களுக்கு இலங்கையிலேயே வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதே சிறந்த வழி என்று சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானான நபீக்கின் தாயாரான பரீனா நபீக் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பெண் எதிர்நோக்கும் வறுமையை நீக்க நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலேயே முடியும் என்றும் ரிஸானாவின் தாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

வறுமைக்கோட்டில் வாழும் இலங்கையர்களுக்கு உள்ள ஒரேயொரு வழி வெளிநாடுகளுக்கு செல்வது மட்டுமேயாகும். இந்த நிலைமை எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாது. அதற்காக வறுமையில் வாழும் குடும்பங்களின் பொருளாதார நிலைமை மேம்படுத்தப்பட வேண்டும்.

அதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ரிஸானாவின் தாயார் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# எமது மக்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்

## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

இலங்கை இன்று சகலரும் சகல உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய நாடாக விளங்குகின்றது. ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம் என்பது தான் எனது ஒரே அபிலாசை என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ளார்.

6 ஆயிரத்து 686 மில்லியன் ரூபா செலவில் ஆறு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட விருக்கும் நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினர். அவர்மேலும் கூறுகையில்,

இன்று சிலர் பொய்பிரசாரம் செய்வதிலும் சேறு பூசுவதிலும் பெரிதும் ஈடுபடுகின்றனர். இதற்கான விசேட குழுவையும் அமைத்துள்ளனர். எனினும் எனது அபிலாசையில் எந்த மாற்றமும் ஒருபோதும் ஏற்படாது எனவும் அவர் கூறினார். யார் கூறினாலும் நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் சகல வசதி வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் நோக்கம்.

இந்த வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு 5 ஆயிரத்து 686 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசாங்கம் இலகு கடன் அடிப்படையிலும் மக்கள் ஆயிரம் மில்லியன் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

நுவரெலியா வைத்தியசாலை நூறு வருடங்கள் பழைமையானது. நாம் பதவிக்கு வந்ததும் இந்த ஆஸ்பத்திரியில் நிலவிய குறைபாடுகளையும் தேவைகளையும் நிவர்த்திப்பதில் விசேட கவனம் செலுத்தினோம். அந்த அடிப்படையில் இவ்வாஸ்பத்திரியை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்து தேசிய வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்து வருகின்றோம்.

அரச சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கென சுகாதார அமைச்சு 2013 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு வேலைத் திட்மொன்றை ஆரம்பித்திருக்கின்றது. இத்திட்டத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன். அதேநேரம் சுகாதார துறைக்கும் கல்வித்துறைக்கும் செலவிடப்படுகின்ற நிதியை ஒரு எதிர்கால முதலீடாகவே நாம் கருதுகின்றோம். அந்தடிப்படையில் தான் இவ்வருடம் சுகாதாரத்துறைக்கென 125 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்றார். (அ-2)

# குற்றவியல் சட்டத்திருத்தமானது பாதக விளைவுகளை ஏற்படுத்தும்

## ஜனநாயகத்திற்கான சட்டத்தரணி அமைப்பு

குற்றவியல் சட்டத்திருத்தமானது பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கும் நோக்கில் அரசாங்கம் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வர முனைப்பு காட்டி வருவ்தாக சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் இந்த சட்டத்திருத்தத்திற்கு எதிராக ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. சட்டத்தரணிகள், அரசியல் கட்சிகள், மனிதவுரிமை அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியில் சட்டத்திருத்தம் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

புதிய சட்டத்தின் மூலம் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டத்தின் மூலம் சந்தேக நபர்கள் துன்புறுத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# ஓய்வு காலத்தை அமைதியாக செலவழிக்கவே விரும்புகிறேன்

## முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா

அரசியலில் ஈடுபடும் திட்டம் கிடையாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஓய்வுக்காலத்தை அமைதியான முறையில் செலவிட விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கட்டான பிரதேசத்தில் அமைந்துள்ள தமது தோட்டத்தில் ஓய்வுக்காலத்தை செலவிட விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடவோ அல்லது அரசாங்கத்தின் பதவிகளைப் பெற்றுக் கொள்ளவோ விரும்பியதில்லை என அவர் தெரிவித்துள்ளார். எனினும் சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கு உதவிகளை வழங்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில ஊடகங்கள் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் தகவல்களை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் எந்தவொரு பதவியையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என சரத் என் சில்வா திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (அ-2)

# உணவுப் பொருளை விளம்பரப்படுத்த அனுமதி பெறவேண்டும்


(கொழும்பு)


பயன்தரும் சத்துப்பொருட்கள் குறித்து உணவுகளில் தவறான தகவல்களை வழங்கும் வர்த்தக விளம்பரங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை கடுமையாக அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உணவுப் பொருட்களின் இயற்கையான தன்மை, குணநலன்கள், பாதுகாப்பு தொடர்பான தகவல்களைத் தவறாக வழங்குதல், பொதியிடல், லேபல் ஒட்டுதல், விற்பனை செய்தல் போன்றவை தொடர்பாக சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

உணவுப்பொருட்கள் தொடர்பாக விளம்பரம் செய்ய உத்தேசிக்கும் நிறுவனங்கள் விளம்பரங்களுக்கான அங்கீகாரத்தை சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டும்.

அவ்வாறு செய்யாதவிடத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)





யாழ்ப்பாணம் அஞ்சல் அத்தியட்சகராக கடமையாற்றி பதவியுயர்வு பெற்று அஞ்சல் தலைமையகத்துக்குச் செல்லும் கூ.ஜெபரட்ணத்தின் பிரிவுபசார நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மற்றும் வட மத்திய மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ந.ரட்ணசிங்கம் நினைவுப் பரிசு வழங்குவதையும் யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் ஆ.தர்மராசா நினைவுக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கருத்திட்டத்திற்கான விசேட செயலமர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்வாதார உதவித்திட்டத்தை வழங்கிவரும் (swiss lab our assistance(SAH) நிறுவனமானது தாம் உதவிக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மாதர் சங்கங்களிற்கு திறன் விருத்தியை மேற்கொள்ளும் பொருட்டும் நுண்நிதி கருத்திட்டதிற்குமானது (புனிக்கன் குளம் ,மாங்குளம்,கற்குவாரி, கணேசபுரம், காதலியர் சமலன் குளம் , ஒதியமலை, பெரிய குளம்)ஆகிய பகுதிகளில் பயிற்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் விசேட சேமிப்பும் கடன் முகாமைத்துவத்திற்குமான ஆவணங்கள் கடந்த 10 ஆம் திகதி வழங்கப்பட்டது.அதற்கான ஆவணப்படுத்தல் பயிற்சி ஒன்றும் பனிக்கன் குளம் மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் 4 பேருக்கும் மாங்குளம் வடக்கு மாதர் கிராமஅபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் 8 பேருக்கும் கற்குவாரி மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் 11 பேருக்கும் மொத்தம் 23 மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் மாங்குளம் ஆசிரியர் மத்திய் பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் தமது சேமிப்பு குழுக்களை திறனுடனும் பலமான ஒரு அமைப்பாகவும் மாற்றம் பெற முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அத்துடன் இதே பயிற்சிநெறி கடந்த 19 ஆம் திகதி கணேசபுரம், காதலியர் சமலன் குளம் ,ஒதியமலை ,பெரியகுளம் ஆகிய மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு காதலியர் சமலன் குள பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-9-261)

# அச்சுறுத்தலுக்கு அடிபணியமாட்டோம்; சட்டத்தரணிகள் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சார்பில் செயற்பட்ட சட்டத்தரணிகளுக்கு இனம்தெரியாத நபர்களினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் கண்டனத்தை தெரிவித்தும் இதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தக்கோரியும் சட்டத்தரணிகளினால் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த கையெழுத்து வேட்டை புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் நேற்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமானது. இதன்போது சட்டத்தரணிகள் குறித்த அச்சுறுத்தல் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமது கையெழுத்துக்களை இட்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணிகள் மரண அச்சுறுத்தலினைக் கண்டித்து கையெழுத்து நடைபெற்றதாக குறிப்பிட்டனர். இது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டதாகவும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் மூலம் தங்களை அடிபணியச் செய்ய முடியாது எனவும் தாம் தொடர்ந்தும் உத்வேகத்துடன் மக்களுக்காகவும் நீதிமன்ற சுயாதீனத்திற்காகவும் பாடுபடுவோம் என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இவ்வாறான அச்சுறுத்தல்கள் எங்கிருந்து பிரயோகிக்கப்படுகின்றன என்பது குறித்து தாங்கள் நன்கு அறிந்துள்ளதாகவும் கடந்த கால அனுபவங்களை வைத்து பார்க்கும் போது இத்தகைய சம்பவங்களுக்கு எத்தகைய விசாரணைகள் நடந்தாலும் இலங்கையில் எத்தகைய நீதியும் கிடைக்கப் போவதில்லை என்பதை தாம் நன்கு அறிந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இருந்தபோதும் இதனை சர்வதேச சமூகத்திற்கு எடுத்தியம்பும் வகையில் இந்த கையெழுத்து வேட்டையினை நடத்தியதாகவும் மக்களே தமக்கு துணையாக நிற்பார்கள் என்றும் சட்டத்தரணிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

அத்துடன் புதிய நீதியரசரின் வரவேற்று வைபவத்தில் கலந்து கொள்ளவதில்லை என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-2)

# 48மணிநேரம் தடுத்து வைக்கும் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பு

## துண்டுப் பிரசுரமும் விநியோகம்

சந்தேக நபர் ஒருவரை நீதிமன்றத்தின் உத்தரவின்றி பொலிஸார் 48 மணி நேரம் தடுத்து வைக்கும் வகையிலான புதிய சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அச்சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்றைய தினம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த சட்டம் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் முன்னிலை சோஷலிச கட்சியினரால் இந்த துண்டுப் பிரசுரங்கள் கொழும்பு கோட்டை பகுதியில் வைத்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை (விசேட ஏற்பாடுகள்) இரண்டாம் மதிப்பீடே நாடாளுமன்றத்திற்கு இன்று கொண்டு வரப்படவிருக்கின்றது.இந்த சட்டமூலம் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுயதொழில் ஓய்வூதியத்திட்டத்திற்கு 1197 பயனாளிகள் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளில் இவ்வாண்டு 60 வயதினைப் பூர்த்தி செய்த பயனாளிகளில் ஆயிரத்து 197 பேருக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட சமூக பாதுகாப்பு சபையின் இணைப்பதிகாரி பா.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 197 பேருக்கு சமூக பாதுகாப்பு சபையினால் இவ்வாண்டில் இருந்து மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 283 ஓய்வூதியர்களுக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 204 ஓய்வூதியர்களுக்கும் உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 154 ஓய்வூதியர்களுக்கும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 147 ஓய்வூதியர்களுக்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 81 ஓய்வூதியர்களுக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 64 ஓய்வூதியர்களுக்கும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட62 ஓய்வூதியர்களுக்கும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 48 ஓய்வூதியர்களுக்கும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 46 ஓய்வூதியர்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 31 ஓய்வூதியர்களுக்கும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 26 ஓய்வூதியர்களுக்கும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 23 ஓய்வூதியர்களுக்கும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 11 ஓய்வூதியர்களுக்கும் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட10 ஓய்வூதியர்களுக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட7 ஓய்வூதியர்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பிறக்குமிட சிறப்பு சுட்டியில் மோசமான நிலையில் இலங்கை

2013 ஆம் ஆண்டுக்கான பிறக்குமிட சிறப்பு சுட்டியில் மிக மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது. நான்கு வருடங்களில் இலங்கையின் பொருளாதாரம் இரண்டு மடங்காகிவிடும் எனவும் பேச்சுக்களுக்கு மத்தியில் இலங்கை அந்த பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

பிரதம நீதியரசரை அவசரமாக பதவி விலக்கியமை, அதிகரித்து வரும் குற்றச்செயல்கள், மக்கள் மீதான பணவீக்கம் ,உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் வரவுள்ள கஷ்டங்கள் என்பவற்றின் பின்புலத்தில் இந்த கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கணிப்பை தி எக்கனமிஸ்ட்என்ற சஞ்சிகை நடத்தியுள்ளது.2030 ஆம் ஆண்டு வரையான பொருளாதார எதிர்வு கூறல்களின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. 2013 இல் பிறந்த பிள்ளைகள் முழு மனிதர்களாகும் போது எதிர்கொள்ளவுள்ள சமூக பொருளாதார நிலைமைகளை இந்த ஆய்வு ஊகித்துள்ளது.

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் அங்கு வாழும் மக்களின் மகிழ்ச்சிக்கும் தொடர்பு பெரிதாக இல்லையென இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

உதாரணமாக அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் உலகின் பொருளாதார சக்திகளாக உள்ள போதும் 16 ஆம் இடத்தை பகிர்ந்துள்ளன.பிரித்தானியா 27 ஆம் இடத் தையும் பிரான்ஸ் 26 ஆம் இடத்தையும் பிடித்துள்ளது. (அ-2)

# பரு.பி.செயலாளர் பிரிவில் நிறைவேற்றுக்குழு தெரிவு

பருத்தித்துறை பிரதேச செயலகங்களிற்குட்பட்ட சமூர்த்தி மகா சங்க நிறைவேற்றுக் குழுத்தெரிவு மற்றும் கட்டுப்பாட்டுச்சபை நிறைவேற்று குழுத்தெரிவுகளிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.க.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இத் தெரிவுக்கூட்டத்தில் கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சமுர்த்தி தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5-19)


# பல்கலை.மாணவன் வாகன விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வாகன விபத்தில் உயிரிழந்ததுடன் மற்றொரு இளைஞர் பலத்த காயங்களுடன் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது, கண்டி பல்லே மகியாவ என்ற இடத்தில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பல்கலைக்கழக மாணவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளான்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக கண்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (அ-2)







யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இந்தியன் வங்கியின் இரண்டாம் ஆண்டு நிறைவு நாளையொட்டி மாதிரி கிராம அபிவிருத்தித்திட்ட ஆரம்ப விழா நேற்று வங்கியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.இந்தியன் வங்கி கிளையின் முகாமையாளர் சந்திரசேகர் உரையாற்றுவதையும் வட்டு. வடக்கு மாதிரி கிராம பயனாளி ஒருவருக்கு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இந்திய துணைத் தூதர் வி.மகாலிங்கம் ஆகியோர் இணைந்து கடன் தொகையினை வழங்கி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-உ.சாளீன்,எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடந்துவிட்ட நேரம் திரும்ப வராது.
-ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேர முகாமைத்துவத்திற்காக மங்கள நிகழ்வுகளை ஒழுங்கு படுத்துவோம்

இன்று உலகெங்கும் பேசுபடு பொருளாக இருப்பது நேரமுகாமைத்துவமாகும். உலகம் வேகமாக-இயந்திரமயமாக மாறிவருகின்ற வேளையில், நேரத்தை திட்டமிடல் செய்யாது காரியங்களைச் செய்ய முற்படுகின்ற போது பல்வேறு சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

அதேநேரம், நேரமுகாமைத்துவம் இல்லாதவர்கள் பதகளிப்பிற்கும் பதற்றமான மனநிலைக்கும் ஆளாகின்றனர் என்ற உளவியலாளர்களின் முடிபுகளும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

எனவே ஒருநாளில் இருக்கக் கூடிய 24 மணி நேரத்தை பகுத்து பணிகளை செய்கின்ற பழக்கத்துக்கு எங்கள் பிள்ளைகளை ஆட்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

எனினும் எங்கள் சமூக கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகள் எங்களின் நேரமுகாமைத்துவத்துக்கு - நேரத்தை திட்டமிடுவதற்கு தடையாகவுள்ளதென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இதனை சொல்வதற்காக சமூக, கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் தேவையில்லையென்று கூறுவதாக யாரும் கருதிவிடலாகாது.

எங்கள் சமூக கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் என்பன எங்கள் வாழ்வியலுக்கானது. அது மிகவும் தேவையானதும் கூட.

ஆனால் அந்த நிகழ்வுகளில் சில மாற்றங்களை செய்யலாம் என்பதே நமது கருத்து. உதாரணமாக முன்பெல்லாம் தமிழர் திருமணம் என்பது இரவு வேலைகளிலேயே நடைபெற்றது.

இவ்வாறு இரவுவேளையில் திருமணச்சடங்குகளை நடத்துவதன் மூலம் நேரச்சிக்கல்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். பகல் வேளையில் திருமண நிகழ்வுகள் நடைபெறுவதால் அரச பணியில் ஈடுபடுகின்றவர்கள், அதிலும் ஆசிரியர்கள் திருமண நிகழ்வுகளுக்காக லீவு எடுக்கும் நிலைமை உருவாகிறது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

அதேநேரம் விவசாயிகள், வர்த்தகர்கள் என ஒருபெரும் உழைப்பாளர் வர்க்கத்தின் பலமணிநேர மனித மணித்தியாலங்கள் வீணாகி போகின்றன.

எனவே உழைக்கும் நேரங்களை, பாடசாலைகள் இயங்குகின்ற நேரங்களை பயனுடையதாக ஆக்குவதற்கு திருமணச்சடங்குகள் மற்றும் மனை புகுதல் போன்ற நிகழ்வுகளை இரவு வேளைக்கு மாற்றிக்கொள்கின்ற ஒரு நடைமுறையை நாம் பின்பற்றுவது அவசியமாகின்றது.

எங்கள் நேரமுகாமைத்துவம் எத்தனை சிறப்பானதென்பதற்கு நல்லூர் கந்தனின் ஆலயம் தக்க சான்றாகும்.

மிகப்பெரிய வீதியை சுற்றிவருகின்ற போதிலும் அங்கும் ஒரு நேர வரையறை இருக்கின்ற சிறப்பை உலகில் எங்கும் காணமுடியாது என்றே கூறவேண்டும்.

நல்லூர் கந்தன் ஆலயத்தில் எங்குமில்லாத நேரமுகாமைத்துவம் பின்பற்றப் படும்போது நாங்கள் நேரமுகாமைத்துவம் பற்றி இம்மியும் சிந்திக்காமல் இருப்பது பொருத்தமானதல்ல. ஆகையால் திருமணச்சடங்குகளை மாலை நேரம் நோக்கியதாக இரவு வேளைகளில் நடத்துவதன் மூலம் எங்களின் நேரமும் பயனுள்ளதாக்கப்படுவதுடன் சமூக உறவும் பாதுகாக்கப்படும்.

சமூக உறவு, கடமை, நேரம் என்பன ஒன்றோடு ஒன்று முரண்படக் கூடியவை என்பதால் எங்கள் சடங்குகளை இரவுப் பொழுதுக்கு திசை திருப்புவது நல்லதல்லவா?

# புலிகளுக்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்துகொண்டு 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதப்பகுதியில் மாதகல் கடற்படைத்தளத்திற்கு தாக்குதல் நடத்த வியூகம் அமைத்தார் என குற்றச்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நபர் யாழ்.மேல்நீதிமன்றினால் நிரபராதியென விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டில் திருகோணமலையைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகுமார் என்பவர் 2009ஆம் ஆண்டு மே மாதக் காலப்பகுதியில் கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் இவரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை ஒரு சான்றாக வைத்து வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் கட்டாயப்படுத்தப்பட்டதென கூறப்பட்டு கடந்தவருடம் மார்கழி மாதம் 11ஆம் திகதி மன்றினால் நிராகரிக்கப்பட்டது.

நேற்றையதினம் யாழ்.மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கினை விசாரணை செய்தஆணையாளர்குற்றஞ்சாட்டப்பட்டவர் நிரபராதி என கண்டு விடுதலை செய்தார்.

இவ் வழக்கில் வழக்கு தொடுநர் சார்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்த சாமியும் எதிராளி சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸும் ஆஜராகியிருந்தனர். (செ-4)

## கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சிப்பாய் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

சக இராணுவச்சிப்பாய்கள் இருவரை கைக்குண்டு வீசி கொலை செய்தார் என குற்றஞ் சாட்டப்பட்டு கைதாகிய இராணுவச்சிப்பாயினை யாழ்.மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத காலப்பகுதியில் பூநகரிப் படையினர் முகாமில் கந்தகே ரதாகே ரஞ்சித், ஹப்புகாவே நந்தபால, ஆகிய இரு இராணுவ சிப்பாய்களினை கைக்குண்டு வீசி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் குருநாகல் கொட்டு கச்சிகேயினைச் சேர்ந்த ஹேரத் முதியான் நாபாகே ஜமிந்த என்ற இராணுவச் சிப்பாய் காங்கேசன் துறையிலிருந்த போது காங்கேசன்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட்டு பின் யாழ்.நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களகத்தினால்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றையதினம் யாழ். மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கினை விசாரணை செய்ய மேல் நீதிமன்ற ஆணையாளர்ஜே.விஸ்வநாதன் குறித்த இராணுவச்சிப்பாயினை விடுதலை செய்துள்ளார்.

வழக்கு தொடுநர் சார்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும், எதிராளி சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸும் ஆஜராகி இருந்தனர். (செ-4)

## யாழ்.வைத்தியசாலை வீதியில் வாகன கட்டுப்பாட்டு விதிமுறை

### மாநகர முதல்வர் புதிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் ஏற்பட்டுள்ள வாகான நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வைத்தியசாலையின் வீதியின் நடுவேயுள்ள வாகனத்தரிப் பிடத்தில் கனரக வாகனங்களை நிறுத்தி வைத்து வர்த்தக நிலையங்களுக்க பொருட்களை இறக்குவதற்கோ வர்த்தக நிலையங்களிலிருந்து பொருட்களை ஏற்றுவதற்கோ குறித்த நேரத்திற்குப் பின்னர் அனுமதியில்லை என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இதன்படி முற்பகல் 9 மணி தொடக்கம் 12 மணிவரையும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு அனுமதிக்கப்படுவதோடு அதன்பின்பு பிற்பகல் 3 மணிக்கு பின்பே அனுமதிவழங்கப்பட்டுள்ளது எனவும் வாகனங்கள் தரித்து நிற்கும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 50 ரூபாய் பணம் அறவிடப்படும் என தெரிவித்த முதல்வர் சிறிய ரக வானங்கள் (படி, சிறியரக ஹன்ரர், ஹயஸ்வாகனம்) என்பனவற்றுக்கு ஒரு மணித்தியாலயத்திற்கு 20 ரூபாய் அறவிடப்படும் எனவும் ஆட்டோ, லான்மாஸ்ரர் என்பனவற்றுக்கு 10 ரூபாய் அறவிடப்படும் எனவும் தெரிவித்தார். (செ-6)

## இந்திய வியாபாரிகள் தொடர்பாக

# யாழ்.மாநகரசபை எடுக்கும் முடிவுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத்தயார் - மகாலிங்கம்

(யாழ்ப்பாணம்)

இந்திய வியாபாரிகள் தொடர்பாக யாழ்.மாநகரசபை எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் அறிவித்துள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இந்திய வியாபாரிகள் அத்துமீறி அனுமதியின்றி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததையடுத்து அவர்களைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் விடுத்த வேண்டுகோளை யடுத்து யாழ்.மாநகரசபையினால் இந்திய வியாபாரிகளுக்கு தடைவிதிக்கப்பட்டதோடு துணைத்தூதுவருக்கும் இது தொடர்பில் முதல்வரினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது இதற்கு பதிலளிக்கும் வகையில் துணைத்தூதுவரினால் கடிதம் ஒன்று யாழ்.மாநகர சபை முதல்வருக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் முதல்வர் கூறினார். (செ-6)

## துப்பாக்கி ரவைகள் மிகிந்தலையில் மீட்பு

(மிகிந்தலை)

மிகிந்தலை பொலிஸாரினால் எம்.பி.எம்.ஜி.ரக துப்பாக்கி ரவைகள் 662 மீட்கப்பட்டுள்ளன.

மிகிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தராவ, சியம்பலாகம பகுதியிலிருந்தே இந்த துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கி ரவைகள் அடங்கிய பொதியொன்றை கண்டெடுத்துள்ள பொது மக்கள் அவற்றை பொலிஸாரிடம் கையளித்ததாகவும் இந்த துப்பாக்கி ரவைகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மிகிந்தலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-1)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கஷ்டங்களை வெல்வது எப்படி



மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மச்சரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன.

ஆசிரியரின் வாழ்க்கை முன்மாதிரியாக அமையாமல் மாணவனால் எந்தவிதக் கல்வியையும் பெறமுடியாது.

உன்னுடைய குறிக்கோளை அடைய முயற்சிக்க வேண்டும். தோல்வி கண்டு துவளக்கூடாது. தோல்வியின்மூலமே நாம் புத்திசாலிகளாகிறோம்.

உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மீகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத்தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

இடையறாத பயிற்சியின்மூலம் கஷ்டங்களைநாம் வெல்லமுடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டுவைத்தாலன்றி நமக்கு எதுவும் நேர்ந்துவிடமுடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து புனிதமான எண்ணங்களையே சிந்தித்தபடி நன்மையைச் செய்துகொண்டிருந்தால் தீய செயல்கள் தலைகாட்ட வழியேற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு நடைமுறை; மஹேல அதிருப்தி!



மழை காரணமாக இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி கைவிடப்பட்டமை குறித்து இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களை பெற்றது. பதிலளித்தாடிய இலங்கை அணி 3.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ச்சியான மழை காரணமாகப் போட்டி நீண்ட நேரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு, இறுதியில் போட்டியை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய தயார்நிலையில் மைதானம் காணப்படவில்லை எனத் தெரிவித்துப் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, மூன்று மாதங்களுக்கு முன்னர் பல்லேகலயில் நியூசிலாந்து அணிக்கெதிராக இடம்பெற்ற போட்டியொன்றில் இதைவிட மோசமான நிலைமைகளுக்கு மத்தியில் போட்டியைத் தொடர்ந்ததாகவும், ஆனால் சிட்னியில் அவ்வளவு மோசமான நிலை காணப்படாத போதிலும் போட்டி கைவிடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு வெவ்வேறான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது குறித்து விளக்கம் கோரி சர்வதேச கிரிக்கெட் சபைக்குக் கடிதம் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மழை காலங்களின்போது மைதானம் ஒட்டுமொத்தமாக விரிப்புக்களைக் கொண்டு மூடப்படுகின்ற போதிலும், ஏனைய இடங்களில் அவ்வாறு செய்யப்படுவதில்லை எனத் தெரிவித்த மஹேல, இந்நிலையும் ஆச்சரியமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

## இந்தியா-இங்கிலாந்து 4ஆவது ஆட்டம் நாளை

தோனியின் சொந்த இடத்தில், புதிதாக அமைத்த விளையாட்டரங்கில் இங்கிலாந்துக்கெதிரான 3ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் இந்திய அணி அபார வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றது. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 42.2 ஓவரில் 155 ஓட்டங்களில் சுருண்டது. ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டும், இஷாந்த் சர்மா, அஸ்வின் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய இந்தியா 28.1 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


வீராட் கோஹ்லி 77 ஓட்டங்களும், கம்பீர் 33 ஓட்டங்களும் எடுத்தனர். டோனி 6வது வீரராக ஆடி வருகிறார். ஆனால் கடந்த ஆட்டத்தில் அவர் ரெய்னாவுக்கு முன்னதாக 5ஆவது வீரராக களமிறங்கி ஆடினார். தனது சொந்த ஊரில் போட்டி நடைபெறுவதால் ரசிகர்களின் ஆதரவு காரணமாக டோனி முன்னதாக ஆடி இருக்கலாம் என்று கூறப்பட்டது.

வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவை என்று இருந்தபோது தான் அவர் களமிறங்கினார். ஆனால் ரெய்னாவின் வற்புறுத்தலால் தான் முன்னதாக களமிறங்கினேன் என்று டோனி கூறியுள்ளார்.

இது தொடர்பாக தோனி கூறுகையில், போட்டி நடந்து கொண்டு இருக்கும் போது ரெய்னாவுக்கு முன்னதாக நான் ஆட செல்வது என்று திட்டமிடவில்லை. ரெய்னாவுக்கு அடுத்து நான் அமர்ந்து இருந்தேன். அவர் என்னிடம் எனக்கு முன்பு நீங்கள் ஆட செல்லுங்கள் என்றார். நான் முதலில் தயங்கினேன். அவர் என்னை தொடர்ந்து வற்புறுத்தியதால் நான் முன்னதாக களம் இறங்கினேன் .அதிர்ஷ்டம் கிடைத்ததால் உள்ளூர் ரசிகர்கள் முன்பு ஆட முடிந்தது. ரசிகர்களின் ஆதரவு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டிக்கொண்ட தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. 4ஆவது ஆட்டம் நாளை (புதன்கிழமை) மொகாலியில் நடைபெற உள்ளது. மொகாலி ஆடுகளம் வேகப்பந்து வீரர்களுக்கு சாதகமாக இருக்கும். தற்போது அங்கு கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. அதோடு குளிரும் நிலவுகிறது. இதனால் வேகப்பந்து வீரர்களுக்கு கூடுதல் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிர்ச்சித் தோல்வி



அவுஸ்திரேலிய டெனிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் முதன் வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தார். தரவரிசையில் 75 ஆவது இடத்தில் இருக்கும் சுவெட்லனா குஸ்னட் சோவா (ரஷ்யா) 6-2, 2-6, 7-5 என்ற கணக் கில் 10ஆவது இடத்தில் இருக்கும் வோஸ்னியாக்கியை வீழ்த்தி கால்இறுதிக்குள் நுழைந்தார்.

குஸ்னெட்சோவா கால் இறுதியில் அசரென்கா (பெலாரஸ்) அல்லது எலீனா வெஸ்னியா (ரஷ்யா) சந்திக்கிறார். மற்றைய கால்இறுதி ஆட்டங்களில் ஷரபோவா- மகரோவா (ரஷ்யா), எட்வன்ஸ்கா (போலந்து)- நா லீ (சீனா) மோதுகிறார்கள்.

ஆண்கள் கால்இறுதி ஆட்டங்களில் ஜோகோவிச் (சேர்பியா)- தாமஸ் பெர்டிச் (செக் குடியரசு), டேவிட் பெரர்- அல் மாக்ரோ (ஸ்பெயின்) மோதுகிறார்கள்.

கலப்பு இரட்டையர் பிரிவுப் போட்டியில், இந்தியாவின் சானியா மிர்சா - அமெரிக்காவின் பாப் பிரையன் இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

## 3 ஆவது போட்டியில் வெற்றி; தரவரிசையில் இந்தியா முதலிடம்

ராஞ்சியில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்திய அணி ஒருநாள் போட்டி தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தை பிடித்தது.

3 ஆவது இடத்தில் இருந்த இந்தியா 119 புள்ளிகளை பெற்று முதல் இடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து அணி 118 புள்ளிகளுடன் தொடர்ந்து 2 ஆவது இடத்தில் உள்ளது. நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் தோற்றதால் தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்கு பின் தங்கியது.

இலங்கை 4 ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியா 5 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 6 ஆவது இடத்திலும் உள்ளன. மே.இ.தீவு, பங்களாதேஸ் .நியூசிலாந்து, சிம்பாப்வே முறையே 7,8,9,10 ஆம் இடங்க ளில் உள்ளன.

## தெ.ஆ.அணிக்கு சோதனைக் காலம்

நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் மெதுவாக பந்து வீசியதற்காக தென்னாபிரிக்க அணியின் தலைவர் டிவில்லியர்சுக்கு 2 ஒருநாள் போட்டியில் விளையாட தடைவிதிக்கப் பட்டுள்ளதுடன் வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் 100வீத அபராதமும் விதிக்கப்பட்டது

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பார்ல்லில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் ஆடிய தெ.ஆ.அணி 46.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி 45.4 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின்போது தென்னாபிரிக்க அணி பந்து வீச கூடுதல் நேரம் எடுத்து கொண்டது. பந்து வீசி முடிக்கவேண்டிய குறிப்பிட்ட நேரத்திற்குள் தென்னாபிரிக்க அணியின் 6 ஓவர்கள் வீசி முடிக்கப்படாமல் எஞ்சி இருந்தது.



குறிப்பிட்ட நேரத்துக்குள் அதிகபட்சமாக 2 ஓவர்கள் வரை பந்து வீச தாமதம் ஏற்பட்டால் அந்த அணியினருக்கு ஒரு ஓவருக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் மட்டும் அபராதம் விதிக்கப்படும். 2 ஓவருக்கு மேல் பந்து வீச்சில் தாமதம் ஏற்பட் டால் சம்பந்தப்பட்ட அணியின் தலைவருக்கு ஒரு டெஸ்ட் அல்லது 2 ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும். அத்துடன் ஒவ்வொரு ஓவருக்கும் போட்டி கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்படும்.

மெதுவாக பந்து வீசியது குறித்த விசாரணையின்போது போட்டி நடுவர் டேவிட் பூனிடம், தென்னாபிரிக்க அணி தலைவர் டிவிலலியர்ஸ் தனது தவறை ஒப்புக்கொண்டார். இதனை தொடர்ந்து அணித் தலைவர் டிவில்லியர்சுக்கு 2 ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதித்த போட்டி நடுவர்,தென்னாபிரிக்க அணியினர் அனைவருக்கும் போட்டி கட்டணத்தில் 100 சதவீதத்தை அபராதமாக விதித்தார்.

தடைகாரணமாக நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது மற்றும் 3ஆவது ஒருநாள் போட்டிகளில் டிவில்லியர்ஸ் விளையாடமாட்டார். ஏற்கனவே கலிஸ், டுமினி ஆகியோர் காயம் காரணமாக அணியில் இடம்பெறாத நிலையில் டிவில்லியர்ஸ் ஆட முடியாதது தென்னாபிரிக்க அணிக்கு பலத்த பின்னடைவாக கருதப்படுகிறது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்றும் 3 ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதியும் இடம்பெறுகின்றது.

## 4000 ஓட்டங்களை குறுகிய காலத்தில் கடந்த முதல் இந்தியர் கோஹ்லி

குறுகிய காலத்தில் 4000 ஓட்டங்களை வேகமாக கடந்த இந்திய வீரர் என்ற பெருமையை ஹோஹ்லி தனதாக்கிக் கொண்டார். அத்துடன் சர்வதேச அளவில் இரண்டாமிடத்தை பிடித்தார்.

இங்கிலாந்துக்கெதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் கோஹ்லியின் அதிரடியால் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இப்போட்டியில் இவர் 77 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 49 ஓட்டங்களை எட்டிய போது ஒருநாள் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களை வேகமாக கடந்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

96ஆவது போட்டியில் விளையாடும் கோஹ்லி தனது 93ஆவது இன்னிங்சில் இந்த சாதனையை எட்டியுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் தனது 96ஆவது போட்டியில் 88வது இன்னிங்சில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்து முதலிடத்தில் உள்ளார்.

## டில்சான் மீது புகார்

இலங்கை கிரிக்கெட் வீரர் திலகரட்ன டில்ஷான் மீது அயல் வீட்டுக்காரர் முறைப்பாடு ஒன்றை பொலிஸில் பதிவு செய்துள்ளார். டில்ஷானின் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கமரா தமது வீட்டின் நீர்த்தடாகத்தை நோக்கி இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.இதனால் தமது அந்தரங்கம் பாதிக்கப்படுவதாகவும் தமது இரண்டு மகள்மாரின் உரிமை மீறப்படுவதாகவும் அயல்வீட்டுக் காரரான ரேனுக டி கொஸ்தா என்பவர் முறையிட்டுள்ளார். எனினும் டில்ஷானும் அவரின் மனைவியும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் ஸ்தலத் துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

## 'செஸ் ஆனந்த்' முதல் வெற்றி

நெதர்லாந்தின் விஜ் ஆன் ஜீ நகரில் சர்வதேச செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஹாலாந்து வீரர் லோக் வான் வெலியை, இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வீழ்த்தினார். ஏற்கனவே நோர்வே வீரர் மேக்னஸ் கார்ல்சன் மற்றும் சகநாட்டு வீரர் பி.ஹரிகிருஷ்ணா ஆகியோருடன் 2 போட்டிகளில் சமன் செய்த நிலையில், விஸ்வநாதன் ஆனந்த் முதல் வெற்றியை பெற்றுள்ளார்.

## கங்குலியின் வெற்றிகளை சமன்செய்தார் தோனி

இங்கிலாந்துடனான 3 ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் தோனி தலைமையில் இந்திய அணி 76ஆவது வெற்றியை பதிவுசெய்தது. 133 ஆட்டங்களில் விளையாடி இந்த வெற்றி பெறப்பட்டுள்ளது. இதில் 46 ஆட்டங்களில் தோல்வியும் 3ஆட்டங்களில் சமநிலையும் கண்டது இந்திய அணி 8 ஆட்டங்கள் முடிவு பெறப்படவில்லை. இதன்மூலம் கங்குலி பெற்ற வெற்றியை சமன் செய்தார் தோனி.

கங்குலி தலைமையில் இந்திய அணி 146 ஆட்டங்களில் விளையாடி இந்த வெற்றியை பெற்றது. இதில் 65 ஆட்டங்களில் தோல்வியடைந்திருந்தது. 5 ஆட்டங்களில் முடிவு இல்லை. ஒருநாள் போட்டியில் அதிக வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர்களில் தோனியும், கங்குலியும் இணைந்து 2ஆவது இடத்தில் உள்ளனர். இன்னும் ஒரு ஆட்டத்தில் வென்றால் தோனி முன்னேறிவிடுவார்.

அசாருதீன் 90 வெற்றி பெற்று (174 ஆட்டம்) முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னா வற்புறுத்தியதால்தான் முன்னதாக களமிறங்கினேன்

## சொந்தவூர் என்பதற்காக அல்ல—தோனி



இங்கிலாந்து அணிக்கு எதிரான 3-வது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 42.2 ஓவர்களில் 155 ஓட்டங்களுடன் சுருண்டது. ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுக்களையும், இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 28.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

விராட் ஹோலி 77 ஓட்டங்களையும், கம்பீர் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் தோனி 6-வது இடத்திலேயே ஆடிவருகிறார்.

ஆனால் கடந்த 3-வது போட்டியில் 5-ம் இலக்க வீரராக களமிறங்கி ஆடினார்.

தனது சொந்த ஊரில் போட்டி நடைபெறுவதால் ரசிகர்களின் ஆதரவு காரணமாக தோனி முன்னதாக ஆடியிருக்கலாம் என்று கருதப்பட்டது.

வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தபோதுதான் அவர் களமிறங்கினார். ஆனால் ரெய்னாவின் வற்புறுத்தலால் தான் முன்னதாகக் களமிறங்கினேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

போட்டி நடந்து கொண்டு இருக்கும் போது ரெய்னாவுக்கு முன்னதாக நான் ஆடச் செல்வது என்று திட்டமிடவில்லை.

ரெய்னாவுக்கு அடுத்து நான் அமர்ந்திருந்தேன். அவர் என்னிடம் எனக்கு முன்பு நீங்கள் ஆடச் செல்லுங்கள் என்றார்.

நான் இதற்கு முதலில் தயங்கினேன். அவர் என்னைத் தொடர்ந்து வற்புறுத்தியதால் நான் முன்னதாகக் களமிறங்கி ஆடினேன் எனவும் கூறியுள்ளார்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 2:1 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. 4-வது ஆட்டம் நாளை மொகாலியில் நடைபெறவுள்ளது.

# மோசடி செய்த ஷேன் வோர்னுக்கு 5 ஆயிரம் டொலர் அபராதம்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த பிக்பாஷ் இருபது-20 உள்நாட்டு கிரிக்கெட் போட்டியில் மெதுவாக ஓவர்களை வீசியதற்காக மெல்பேர்ன் ஸ்ரார்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்னுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையைத் தவிர்க்க தன்னை அணித்தலைவர் என்ற பட்டியலிலிருந்து மறைத்து மோசடி செய்து மற்றொரு போட்டிகளில் விளையாடிய ஷேன் வோர்னுக்கு 5 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணிக்கெதிரான அரையிறுதிப்போட்டியில் ஷேன் வோர்ன் தலைமை வகிக்கும் மெல்பேர்ன் ஸ்ரார்ஸ் அணி தோல்வியைத் தழுவியது.



ஒரு போட்டித் தடை அச்சம் காரணமாக அதிகாரபூர்வ அணித்தலைவர் ஷேன் வோர்ன் நாணயச்சுழற்சியில் ஈடுபடாமல் அவரது அணியின் மற்றொரு வீரர் ஜேம்ஸ் பாக்னரை அணித்தலைவராக மாற்றி நாணயச்சுழற்சியில் ஈடுபட வைத்தார்.

இது குறித்து நடைபெற்ற விசாரணையில் மெல்பேர்ன் ஸ்ரார்ஸ் அணி சார்பில் அதன் தலைமைச் செயலர் கிளின்ட் கூப்பர் ஆஜரானார்.

குறித்த நேரத்தில் குறைவாக ஓவர்களை வீசியதற்காக தடை விதிக்கப்பட்ட ஷேன் வோர்ன் அணியின் மற்றொரு வீரரை அணித்தலைவராக்கி தான் ஒரு சாதாரண வீரராக விளையாடி மோசடி செய்தார்.

இது கிரிக்கெட் ஆட்ட உணர்வுகளுக்கு எதிரானது என்பதோடு தடையை மீறி விளையாடிய விதிமீறல் குற்றமாகும் என்று அவுஸ்திரேலிய நிர்வாகம் அவருக்கு 5 ஆயிரம் டொலர்கள் அபராதம் விதித்தது.

## கரம் சுற்றுப் போட்டி மணி வி.கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரம் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் கரம் சுற்றுப் போட்டியில் மணி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மணி விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன், 2-ம் இடத்தினை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக ஏ அணியும், 3-ம் இடத்தினை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக பி அணியும் பெற்றுக் கொண்டன.

## கால்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்து சுற்றுப் போட்டியில் பொலிகண்டி விண்மீன் ஏ அணியும் நவாலி சென்.பீற்றர்ஸ் அணியும் வெற்றி பெற்றுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த முதல் போட்டியில் இமையாணன் மத்தி பி அணியும், பொலிகண்டி விண்மீன் ஏ அணியும் மோதின.

இதில் பொலிகண்டி விண்மீன் ஏ அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு போட்டியில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணியும், பொலிகண்டி பொலியபாரதி அணியும் மோதின.

இப்போட்டியில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

## திருநெல்வேலி சீ.சீ. அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 10-வது ஆண்டாக நடத்திவரும் 50 பந்து பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் 5-வது போட்டி நேற்று மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் திருநெல்வேலி சீ.சீ அணி, கிறஸ் கொப்பர்ஸ் அணியை 74 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சீ.சீ அணி 50 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் லவகாந் 62, சுரேந்திரன் 52, விதுன் 40, கபில் ஆட்டமிழக்காது 34, அசோக் 22 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் கிறஸ் கொப்பர்ஸ் அணி சார்பாக பார்த்திபன் 3, ரவிசங்கர் 2, கோகுலன் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

274 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறஸ் கொப்பர்ஸ் அணி 35.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் காந்தசீலன் 37, கோகுலன் 62, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி சீ.சீ அணி சார்பில் கபில் 3, பிரபு 2, சுரேந்திரன் 2, தர்சிகன், லவகாந் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு திருநெல்வேலி சீ.சீ அணி 8.7 புள்ளிகளையும், கிறஸ் கொப்பர்ஸ் அணி 2.7 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட சுற்றுப்போட்டியில் ஈ பிரிவில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி முதலாவது அணியாகவும், திருநெல்வேலி சீ.சீ 2-வது அணியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி, பிரிவு ஏயில் (பல்கலைக்கழகம்-நியூஸ்ரார்) தோல்வியுறும் அணியுடனும், திருநெல்வேலி சீ.சீ அணி வெற்றி பெறும் அணியுடனும் 2-வது சுற்றில் கலந்து கொள்ளவுள்ள என்பது குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் இந்துக் கல்லூரியை வீழ்த்தி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத பந்து பரிமாற்றங்கள் கொண்ட இரண்டு நாள் துடுப்பாட்டப் போட்டிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத பந்து பரிமாற்றங்கள் கொண்ட இரண்டு நாள் துடுப்பாட்டப் போட்டிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்நெல் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 31.4 பந்துப் பிரிமாற்றத்தில் 75 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சிவபார்த் 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக நிமலேந்திரன் 5, சோபிநாத் சுவான் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 34.3 பந்து பரிமாற்றங்களுக்கு 136 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அபிநாஜ் 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மானிப்பாய் இந்து சார்பாக பிரதீபன், கேந் தன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

61 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2-வது இன்னிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 21.3 பந்து பரிமாற்றங்களில் 87 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கிரிகாந்த் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக சோபிநாத் சுவான், நிமலேந்திரா ஆகியோர் தலா 5 இலக்குகளைக் கைப்பற்றினர்.

27 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கினை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 பேருக்கு நேற்று நியமனம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையாளர்கள் 17 பேருக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் வைத்து இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இதில் 2பேர் முல்லைத்தீவு வலயத்திற்கும், 4 பேர் மடு வலயத்திற்கும், 3பேர் துணுக்காய் வலயத்திற்கும், 3 பேர் வவுனியா வடக்கு வலயத்திற்கும், 2 பேர் கிளிநொச்சி வலயத்திற்கும், 3 பேர் மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ், கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (செ-6)

## மகிந்தவின் ஆட்சி...

போன்றும் மாறியுள்ளது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடங்கஸ்லந்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இரட்டை வேட...

இரண்டில்லை. இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அமெரிக்கா அதனை விமர்சித்திருந்தது.

1993 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இது போன்ற ஒருசம்பவம் இடம்பெற்றது என்பதை அவர்கள் மறந்துவிட்டார்களா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (செ- 11)

## தனியார் பேருந்து...

மோதியுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த அனைவரும் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் புன்னாலைக்கட்டுவன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4, 78,85)

## கண்ணிவெடி...

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணியில் இராணுவத்தினரின் பொறியியல் பிரிவு ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இவ் வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-4)

## பல்கலை மாணவர்...

வர்களின் விடுதலையை அடுத்து ஏனைய இரு மாணவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## தேவையற்ற விமர்சன...

எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ஐ.நாவின் மனிதவுரிமைகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அலுவலகத்திலிருந்து இலங்கை வந்த ஹனி கொலியின் தவறான செயற்பாட்டை இது நினைவூட்டுவதாகவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசரை பதவி விலக்கும் செயன்முறையில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 1985இல் ஏற்கப்பட்ட அடிப்படைத் தத்துவங்களை இலங்கை கடைப்பிடித்துள்ளது. இறைமையுள்ள நாடான இலங்கை, அரசியல் அமைப்பில் கூறப்பட்ட வழிவகைகளை ன்கயாண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லை என்பதை உங்கள் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

உங்களின் தகவலுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் பிரதியை அனுப்பி வைக்கிறேன் எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நிர்வாகத்துறையின் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் நீண்ட வரலாறு உண்டு என்ற உங்களின் கூற்று உங்களுக்கு வழங்கப்பட பணியாணைக்கு அப்பாற்பட்டது. நீங்கள் சர்வதேச சிவில் சேவையாளர் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நியமங்களை மீறிவிட்டீர்கள் எனவும் பதில் செயலாளர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கண்டன தீர்மான...

செயற்பட்ட சட்டத்தரணிகள் மீது விடுக்கப்பட மரண அச்சுறுத்தல்களை கண்டித்து மக்களின் கையெழுத்துக்களை சேகரிக்கும் போராட்டம் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. உச்சநீதிமன்ற வளாகம் முன்பாக சட்டவாதிகள் ஒன்றியம் இந்தப்போராட்டத்தை நடத்தியது.

இதே வேளை புதிய தலைமை நீதி யரசாரின் வரவேற்பு விழாவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கலந்துகொள்ளாது என்றும் மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார். (செ-11)

## ஆயுர்வேத...

கொலை செய்யப்பட்டவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். வீட்டில் வைத்தியர் தனியாக இருப்பதையும் வீட்டின் நிலைமை பற்றி நன்கு அறிந்த திருடர்கள் நன்கு திட்டமிட்டே இத் திருட்டு சம்பவத்தை நிகழ்த்தியிருக் கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ -4)

## இந்தியப் பிரதம...

குர்ஷித்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்நிலையில் புதன்கிழமையில் பீரிஸ், மன்மோகன் சிங்கை சந்திப்பதை இந்து பத்திரிகை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்போது இரண்டுதரப்பும் நல்லிணக்கம், இனப்பிரச்சினை தீர்வு, இலங்கைக்கான இந்திய உதவிகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக இந்து குறிப்பிட்டுள்ளது. (செ- 11)


### திருமறைக் கலாமன்றம்
### கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2013 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

- வாய்ப்பாட்டு
- நடனம் (பரதம், கதகளி, மோகினி)
- வீணை,
- வயலின்
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- ஓர்கன் (கீபோட்),
- ட்றம்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து
- கண்டிய நடனம்
- யோகாசனம் அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக், ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப்பாடம்**

- ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து 31.01.2013 வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் :

அதிபர், கலைத்தூது அழகியற் கல்லூரி.
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212229419

(சி-2188)



## Allianz Lanka காப்புறுதி நிறுவனத்தின்
Allianz　திருநெல்வேலி பிராந்தியக் கிளையின்　Allianz
## உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வின் பதிவுகள் (17.01.2013)



















Allianz　Allianz　Allianz　Allianz　Allianz　Allianz　Allianz









(சி-2119)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.